Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தலைநிமிர்வு எண். 49
கோன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 119
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் விலை வைகாசி 27 ரபி: அவ் 12 ஞாயிற்றுக்கிழமை (9-6-68)

முக்கிய அறிவித்தல்

10-6-68 திங்கட்கிழமை நடைபெறும் வற்றாப்பளை கண்ணகி பொங்கலை முன்னிட்டு கோவிலடியில் எங்கள் வானில் ஒரு ரூபாவுக்கு அல்லது ஒரு பார் சோப் வாங்கும் அன்பர்களுக்கு ஒரு அழகான சாக்குப் பை இனாமாக வழங்கப்படும்.

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை

மாவட்டசபை வெள்ளை அறிக்கை பிரதிக்கு

பிரதிநிதிகள்சபையில் தீவைக்க முயன்றார் தம்புள்ள எம். பி.

சபைக்கு வெளியே தீவைத்துக் கொளுத்தினர்

"மாவட்ட சபைகளால் தேசிய ஐக்கியம் வளரும்" — பிரதமர்

கொழும்பு, சனி

மாவட்டசபை பற்றிய வெள்ளையறிக்கையின் பிரதியொன்றை மகக்ள் பிரதிநிதிகள் சபைக்குள்ளேயே வைத்து தீவைக்க முயன்ற தம்புள்ள எம் பி திரு பி. தென்னக்கூன் உபசபாநாயகர் திரு மு சிவசிதம்பரத்தினால் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டார். தீ "வைக்கும் வேலைகளை சபைக்கு வெளியே செய்துகொள்ளுங்கள்: சபைக்குத் தீவைக்க முயற்சி செய்யாதீர்கள்" என்று உபசபாநாயகர் கூறினார் கொளுத்தியதீயை அணைத்துவிட்டு தனது வெள்ளையறிக்கைப் பிரதியை தமது நாற்காலியின் கீழ் கசக்கி எறிந்துவிட்டு திரு தென்னக்கூன் வெளியேறினார்.

எதிர்க்கட்சிக் கூட்டணி எம். பி. க்களுடன் வெளியே சென்றுவிட்டு பின்னர் சபைக்குத் திரும்பினர்

சபையிலிருந்து வெளி நடப்புச் செய்த எம். பி. க்கள், சபைக் கட்டிடத்துக்கு வெளியே, சபாநாயகர் செல்லும் வாசல் முன்னிலையில் வெள்ளையறிக்கைப் பிரதிகளைத் தீவைத்துக்கொளுத்தினர். திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா முதலில் தமது பிரதிக்குத் தீவைத்தார். இதைத்தொடர்ந்து இதர எதிர்க்கட்சிக் கூட்டணி எம். பி. க்களும் தங்கள் பிரதிகளைத் தீவைத்துக்கொளுத்தினர். பிரதிகள் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தபோது அவர்கள், "முருகா மாவட்டசபை முடிந்தது" என்று கோஷமிட்டனர்.

'முருகா முடிந்தது' என்ற கோஷத்துடன் தீவைத்தனர்

மாவட்டசபை பற்றிய வெள்ளையறிக்கைமீது விவாதிப்பதற்காக மக்கள் பிரதிநிதிகள்சபை இன்றுகாலை 10 மணிக்குக் கூடியது சபை கூடியதும் வெள்ளையறிக்கை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைப்பதற்காக பிரதமர் திரு. டட்லிசேனநாயகா எழுந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயகாவும் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் எழுந்தனர். திருமதி பண்டாரநாயகா சபையிலிருந்து வெளியே நடந்தார். அவரைத் தொடர்ந்து இதர எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் வெளியேறினர். இச்சமயத்தில்தான் தம்புள்ள எம். பி திரு. பி. தென்னக்கூன் வெள்ளையறிக்கைப் பிரதியொன்றிற்கு தீவைக்க முயன்றார். ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், திரு. ஆர். ஜி. சேனநாயகா, திரு. முதலான்சே தென்னக்கூன் ஆகியோர் வெளிநடப்புச் செய்யவில்லை. அவர்கள் விவாதத்தில் கலந்து கொள்வதற்காக சபையில் அமர்ந்திருந்தனர். கம்பளை எம்.பி. திரு. எஸ் டி. பண்டாரநாயகா

திருச்செல்வம் இருந்தார் காலையில் ஜி. ஜி. வரவில்லை

வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தைப் பார்ப்பதற்காக உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம் திருச்செல்வம் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு வந்து பிரமுகர்கள் கலரியில் அமர்ந்திருந்தார். நண்பகல் உணவுக்காக சபை கலையும்வரை காழ்ப்பாணம் எம். பி.யும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி பொன்னம்பலம் சபைக்குவரவில்லை.

பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு

மாவட்ட சபைகளை எதிர்த்து எதிர்க்கட்சிக் கூட்டணியினர் ஹைட்பார்க்கிலும் புதிய நாடாமன்றத்திலும் நடத்தும் பொதுக்கூட்டங்களையொட்டி நகரில் அமைதியைப்பாதுகாப்பதற்கென மேலும் ஆயிரம் பொலிசார் இதர இடங்களிலிருந்து அழைக்கப்பட்டுள்ளனர். முக்கிய இடங்களில் ஆயுதந்தாங்கிய பொலிசார் காவல் புரிகின்றனர். பௌத்தபிக்குகள் சிலர் ஊர்வலம் செல்வதற்கான ஏற்பாடுகள்செய்திருப்பதால் அவர்களின் நடவாட்டம் பற்றி தமக்கு உடனுக்குடன் தகவல் கொடுக்குமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ் அதிபர் உத்தரவிட்டுள்ளார்

எதிர்க்கட்சியினருக்கு பிரதமர் பதில்

வெள்ளையறிக்கை மீதான விவாதத்தை பிரதமர் ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் மாவட்டசபைபற்றி எதிர்க்கட்சியினர் செய்து வரும்பிரசாரம் உண்மைக்கு மாறான உண்மையை மறைக்கும் செயல் என்று கண்டித்தார்.

மாவட்டசபைகள் தேசிய ஐக்கியத்தை குலைக்கமாட்டாது. நாட்டைப் பின்வுபடுத்தாது நாட்டின் ஐக்கியத்துக்கு இது மேலும்துணை செய்யும் என்று பிரதமர் கூறினார். தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின்னர் உருவாகியுள்ள தேசிய ஐக்கியத்தை மேலும் வலுப்பெறச் செய்வதற்கு மாவட்டசபைகள் மகோதா மேலும் ஒரு படி உதவியாக இருக்கும் என்றும் அவர் சொன்னார்.

பிரதமர் தமது பேச்சில் பத்திரிகைகள் செய்து வரும் தவறான பிரசாரத்தையும் பலமையாகக் கண்டித்தார்.

மாவட்டசபைகள் பற்றி மக்களைத் தவறான வழியில் திருப்புவதற்கு எதிர்க்கட்சியினர் உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களைச்

(8-ம் பக்கம்பார்க்க)

இன்று நபிகள் ஜயந்தி தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் வழக்கமாகவே நபிகள் பிரான் தொண்டர் சபையினரால் இன்றும் கொண்டாடப்படவிருக்கின்றது. மண்ப-உல்-உலூம் பாடசாலையில் இன்று காலை 8 மணிக்கு ஆலிஜனாப் என். எம். முகம்மதுமீரான் தலைமையில் திருக்குர் ஆன் ஓதுதலுடன் விழா ஆரம்பமாகும்.

காலை 9 மணிக்கு சிற்றுண்டி விருந்தும் தொடர்ந்து மார்க்க அறிஞர் காதிர் சொற்பொழிவுகளும் இடம்பெறும். பி.ப ஒரு மணிக்கு திருக்குர் ஆன் நாமம் செய்தல். 1 30 மணிக்கு விருந்து வைபவம்.

இதற்கான ஏற்பாடுகளைச் சபையின் செயலாளர்களான ஜனாப்கள் எம். ஓ முஹிதீன் ஏ காதர், எம். , அக்பர் ஆகியோர் கவனித்து வருகின்றனர். கடந்த 38 வருடங்களாக இச்சபை நபிகள் ஜெயந்தி விழாவைத் தொடர்ந்து கொண்டாடி வருகிறது.

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

டொலர்
அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பெரும்பான்மையினரின் வகுப்புவாதத்தைவிட பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் பேராபத்தானது.

—ஸ்ரீ ஜவஹர்லால் நேரு

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

மாதிலரையக் கிலைவருஷம்
வைகாசி மாதம் 27-ந்திகதி
(9-6-68)

வள்ளுவர் நினைவு

இன்று திருவள்ளுவர் தினம். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்துவிட்ட' தமிழ்நாடும் தமிழ் கூறும் நல்லுலகமும், திருவள்ளுவரை மறந்துவிடாமல் ஆண்டுக்கொரு தடவையாவது விழாவெடுத்து வருவது பாராட்டுக் குரியதுதான். ஆனால் வள்ளுவர்காட்டிய வழியில் தமிழ் கூறும் நல்லுலகம் வாழ்ந்து காட்டி 'வள்ளுவன் தன்னை உலகம்' பின்பற்றச் செய்துள்ளதா?

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பது வள்ளுவர் வாக்கு. இந்த வாக்கை உணர்ந்து, அறிந்து தமிழ் மக்கள் நடந்து கொண்டால் கட்சி வேற்றுமைகள், கோஷ்டிப் பூசல்கள், மோதல்கள் ஏற்படுமா, தமிழினம் இன்னும் தாழ்வுற்றிருக்குமா?

மனிதன் எப்படி வாழவேண்டும், எப்படி வாழமுடியுமென்பதற்கெல்லாம் வழிகாட்டும் குறளை தமிழன் தனக்கே சொந்தம் என்று உரிமைபாராட்டிப் பெருமைகொள்ளும் திருக்குறளை தமிழனே கடைப்பிடித்து ஒழுகினாலல்லவா வான்புகழ் படைத்த வள்ளுவனை, உலகம் அறிந்து கொள்ளும்; உணர்ந்து கொள்ளும். ஆண்டுக்கொருதடவை விழாக் கொண்டாடி வள்ளுவர் புகழை மணிக்கணக்காகப் பேசுவதால் பயனில்லை. இதுவரை பேசிப் பேசிக் காலம் கழிந்து விட்டது. இனி தமிழர் வள்ளுவர் காட்டிய வழியில் நடந்து தம்மை நல்வழிப்படுத்திக் கொள்வதுடன் பிறருக்கும் வழிகாட்டவேண்டும். இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு விசேஷ பொறுப்பும் கடமையும் உண்டு. இந்நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தவருக்கு திருவள்ளுவரை உணர்த்துவதுதான் அப்பெரும் பொறுப்பு. இதைச் செய்தால் வள்ளுவர் வாழ்வார். நாமும் வாழ்வோம்.

அவசரகால நிலை

அவசரகாலச் சட்ட விதிகளை நீக்க வேண்டுமென [எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த பிரேரணை மக்கள் பிரதிநிதிகள் சபையில் தோல்வியடைந்துள்ளது. ஒரு ஜனநாயக நாட்டில் அவசரகாலச் சட்டம் காலவரையறையின்றி அமுலிலிருப்பதும் அவசரகாலச் சட்டவிதிகளின் துணையுடன் ஓர் அரசாங்கம் ஆட்சி செய்வதும் ஜனநாயக வாழ்க்கை முறைக்கும் ஆட்சி பீடத்திலுள்ள அரசாங்கத்துக்கும் நிச்சயம் பெருமை தர மாட்டாது என்பது உண்மையே.

ஆனால் ஜனநாயக சுதந்திரத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமலும் எந்த சந்தர்ப்பத்தையும் அரசியல் இலாபத்துக்காகவும் தனிப்பட்ட இலாபம் கருதியும் சொந்த விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்று வதற்காகவும் பயன்படுத்தும் மனப்பான்மை கொண்டவர்கள் உள்ள ஒரு நாட்டில் மக்களின் உயிரையும் உடைமைகளையும்பாதுகாக்கவும் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும்நிலை நாட்டவும் அவசரகாலச் சட்ட விதிகளை அரசாங்கம் பயன் படுத்துவதில் என்ன தவறு?

இந்த அரசாங்கம் மட்டுமல்ல இதற்கு முன்னைய அரசாங்கங்களும் தங்கள் ஆட்சிக்காலத்தில் அவசரகாலச் சட்ட விதிகளை நீண்டகாலம் பயன்படுத்தியிருக்கின்றன. அச் சமயம் இன்றைய ஆளும்கட்சியினர் அன்றைய ஆட்சியாளரான இன்றைய எதிர்க்கட்சியினரைக் கண்டித்தனர். இன்று நிலைமைமாறியிருக்கிறது.

ஜனநாயக உரிமைகளை துஷ்பிரயோகம் செய்யாமல் ஜனநாயக சுதந்திரத்தை சரியான முறையில் சகலரும் அனுபவிக்க அரசியல் தலைவர்கள் வழி காட்டுவார்களானால் இந்த அரசாங்கம் மட்டுமல்ல எந்த அரசாங்கமும் அவசரகாலச் சட்டத்தை வைத்து ஆட்சி நடத்த வேண்டியேற்படாது!

யாழ். மாவட்டஅரசாங்க அதிபர் அபயசேகரா

முதல் திகதி தபால்அதிபராக பதவியேற்கிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா புதிய போஸ்ட் மாஸ்ரர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இப் புதிய பதவியை அடுத்த மாதம் 1-ம் திகதி ஏற்றுக் கொள்ளுவார்.

கடந்த இரண்டரை வருடங்களாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு வேணன் அபயசேகரா கலை கலாச்சார வளர்ச்சிக்காக கூடிய பங்குகொண்டு உழைத்தார். யாழ் பிரதேச கலாமன்றத்தின் தலைவராகவும் பணிபுரிந்த இவரது சேவைகளை பாராட்டுமுகமாக பிரமாண்டமான பிரியாவிடை ஒன்றை அளிக்க உதவி அரசாங்க அதிபர் திரு நி. முருகேசம்பிள்ளை தலைமையிலான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்க அதிபராக திரு வை அமிர்தநாயகம் நியமிக்கப்படலாமென தெரிகின்றது.

[கா. தி]

கூட்டுறவு தினவிழா

வட்டுக்கோட்டை, சனி

சர்வதேச கூட்டுறவு தின விழாவை வருகிற மாதம் முதலாம் திகதி நாடு பூராகிலும் கொண்டாட கூட்டுறவுத் திணைக்களம் ஏற்பாடுகள் செய்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களால் கொண்டாடப்பட்ட இத்தினம் இவ்வாண்டு சகல சங்கங்களாலும் கிராமரீதியில் கொண்டாடப்படவிருக்கிறது.

வட்டுக்கோட்டைகோவிற்பற்றில் இத்தினத்தைக் கிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அராலி, சங்கரத்தை, வட்டுக்கிழக்கு, மேற்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் இது பற்றிக் கூடி ஆராய்ந்தனர்.

சம்பந்தர விழா

கோப்பாய், சனி

ஸ்ரீஞானசம்பந்தர் விழா 11-ந்திகதி கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் நடைபெற விருக்கிறது. கோப்பாய் திருவருள் நவநெறி மன்றத்தினரால் நடாத்தப்படும் இவ் விழாவில் பல சைவப் பெரியார்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

பரிசளிப்பு விழா

உடுவில், சனி

வலிகாமம் வடக்கு உடுவில் பகுதி விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 10ம் திகதி நடைபெறவிருக்கிறது.

விளையாடுப் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விளையாட்டரங்கில் கன்று மாலை 3மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை இவ்விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார். திருமதி முருகேசம்பிள்ளை வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குவார்.

இளம்பெண்ணின் மர்மமரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீலாவ தேவியின் உள்ளுறுப்புகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

மயக்கமுற்றநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமான ஓட்டுமடத்தைச்சேர்ந்த 20 வயது இளம் பெண்ணை இவர் மயக்கம் தெளியாமலேயே மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரண விசாரணை நடத்தினார். டாக்டர் ஆ. வைத்திலிங்கம் இறந்தவரைப்பிரேதபரிசோதனை செய்துபின்னர் உள்ளுறுப்புகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

[நி. கா]

இன்றைய பலன்

[9 - 6 - 68]

வைகாசி மீ 27 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- சதுர்த்தசி.

நட்சத்திரம்- [விசாகம் பகல் 11-09 மேல் அனுஷம்.

ராகுகாலம் - 4-22—5-52.

சுபநேரம் - 8-52—10-22.

இன்று பிறந்தவர்களுக்கு— [நண்பர்கள் வழியால்] பொருட்செலவுகளுக்கு இடமுண்டு. விருந்துபசாரங்களும், கேளிக்கைகளும் முடிவில் உங்களைக் கடன்தொல்லையில் சிக்க வைக்கும் எனவே சிக்கனம் மிக மிக அவசியம் தேவை. உடல்நலம் சுமாராகவிருக்கும். இராசகவலைக்குஇடமுண்டு. எனவே வழக்கு விவகாரங்களை மாட்டிக் கொள்ளாதிருக்கவும். வெளியில் பதட்டநிலை நிலவினும், வீட்டில் பரிவுக்கும் பாசத்துக்கும் இடமுண்டு.

மேஷம்- துன்பத்தின் நிழலாட்டம் தயர்படுத்தநாள்.

ரிஷபம்- குடும்பத்தில் மகிழ்ச்சி, குழந்தைச் செல்வம்

மிதுனம்- போனது போகட்டும் பொறுமையேநன்று.

கடகம்- சிநேகிதர் வருகை, சீரான வாழ்வு.

சிம்மம்- மகிழ்ச்சிப் பெருக்கு, பிரிந்தவர் இணைவர்.

கன்னி- கைநிறையப் பணம், கலகலக்கும் வாழ்வு.

துலாம்- அவசரக் கோலம், அவசர முடிவு.

விருச்சிகம்- இன்னலின் பின்னர், இதய பாரம்.

தனுசு- சொற்சிறப்பு, சொகுசான வாழ்வு.

மகரம்- சூழ்ச்சி மிகுதி, சோதனைக்கட்டம்.

கும்பம்- மாதருவழி மகிழ்ச்சி, மாண்புடன் வாழ்தல்.

மீனம்- பிள்ளையாகப் பெருமை, இல்லறம் இனிக்கும்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

இடமாற்றம்

வல்வெட்டித்துறை சனி

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரியாகக்கடமையாற்றிய டாக்டர் கே. திருநாவுக்கரசு யாழ்ப்பாணம் அரசினர் பெரிய ஆஸ்பத்திரிக்கும் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிவைத்திய அதிகாரியான டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் ஆஸ்பத்திரிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

[5ம் கலத் தொடர்ச்சி]

சரியா, பாவமில்லையா?

எலியைப் பிடித்துக் கொண்டுபோய் மின்சாரக் கம்பத்தில் உட்கார்ந்து புதுடில்லியை அந்தகாரத்தில் ஆழ்த்திய ஆந்தையை சுட்டுக்கொல்வதா. விடுவதா?

—வழிப்போக்கன்

நாட்டிலும் நகரிலும்

முந்தாநாள் இரவு ஓர் ஆந்தை ஓர் எலியைப் பிடித்துக்கொண்டு போய் புதுடில்லி நகரத்தில் மின்சாரக் கம்பிகளும் கொச்சங்களும் உள்ள ஒரு பெரிய கம்பத்தின் மீது உட்கார்ந்து கொண்டதாம். அடுத்த நாள்கு மணி நேரத்துக்கும் அப் பெரும் நகரத்தில் விளக்குகள் இல்லை, ரேடியோ இல்லை, விசிறிகள் இல்லை, மின்சாரத்தால் தொழிற்படும் எதுவுமில்லை. ஆந்தை எலியைத் தின்று ஏப்பம் விட்டு விட்டு பறந்து போகும் வரை புதுடில்லி அந்த ஆந்தையின் ஆதிக்கத்தில் இருந்தது.

இந்த சம்பவத்திலிருந்து இரண்டு விஷயங்கள் புலனாகிறன. ஒன்று, மனிதன் எவ்வளவு தூரம் கண்ணுக்கு தெரியாத இந்த மின்சாரத்தில் தங்கியுள்ளன என்பது. மற்றது, ஆந்தைக்கும் இவ்வுலகத்தில் சீவிக்க உரிமை உண்டென்பது.

மனிதன் நினைக்கிறான் தான் நட்ட மின்சாரக் கம்பம் தனது வசதிக்காகவென்று. ஆந்தை நினைக்கிறது கம்பம் தான் குந்தியிருந்து எலி சாப்பிடுவதற்கென்று.

உலகத்தில் ஆண்டவன் மனிதர்களையும் ஆந்தைகளையும் விட இன்னும் எத்தனையோ உயிர்களைப் படைத்திருக்கிறான் என்பத்து நாலாயிரம் ஜோனி பேதங்கள் என்று கூறுகிறார்கள்.

இவை எல்லாம் சில சமயம் ஒன்றுக் கொன்று ஆதரவாயிருக்கின்றன, சில சமயம் ஒன்றை யான்று ஆக்கிரமித்து சாப்பிட்டு விடுகின்றன.

மனிதனுக்கும் ஜீவ ஜெந்துக்களுக்குமிடையில் தான் போட்டா போட்டி அதிமும்முரமாக நடக்கிறது. முற்றத்தில் காயப் போடும் நெல்லும் அரிசியும் தனக்குத் தான் என்று காகம் நினைக்கிறது. அடுப்பில் இருக்கும் பால் தன்னுடையது என்று பூனை நினைக்கிறது. வயலில் மனிதன் விதைக்கும் நெல்லும் எள்ளும் தன்களுக்குத் தான் என்று கிளியு பன்றியும் யானையும் எலியும் ஒன்றோடொன்று போட்டி. அவன் கட்டி வைத்த மண்குடிசை தங்களுக்கே யென்று கறையானும் கொள்ளியெறும்பும் நினைக்கின்றன. கடைசியில் மனிதனுடையபரத்தமே தனக்கு ஆண்டவனால் கொடுக்கப்பட்ட சாப்பாடு என்று மூட்டைப் பூச்சி நினைக்கிறது.

இப்படியேபலவழியாலும் மனிதனுக்கு தொந்தரவு கொடுத்து அவனைச் சரண்டிப் பிழைக்கும் பிராணிகள் வேண்டுமென்று அவ்வாறு செய்கின்றன? இவையெல்லாம் கடவுளால் தங்களுக்கு கொடுக்கப்பட்டவை என்று நினைத்துத்தானே அவ்வாறு செய்கின்றன. அப்படிப்பட்ட பிராணிகளை நாம் கொல்லலாமா? எது பாவம், எது புண்ணியம்?

சிலந்தி பசிக்கொடுமையைப் போக்குவதற்கு வலையைப் பின்னிவைத்துவிட்டு காத்துக்கொண்டிருக்கிறது. தானும்இரைதேடிச்சென்று பூச்சிவலையில் விழுந்துவிடுகிறது. பூச்சியை காப்பாற்றினால் சிலந்தி பட்டினி. காப்பாற்றாவிட்டால் பூச்சி எமனோகம்!

மனிதனுடைய உடலுக்குள்ளேயே கோடிக்கணக்கான பூச்சிகளும் கிருமிகளும் வாழ்கின்றன. நோயை உண்டாக்குகின்றன. நோய்க்கு மருந்து குடித்து கிருமிகளைக் கொல்கிறோம். அப்படி செய்வது

[4ம் கலத் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபேட் கென்னடிக்குத் தனிப்பட்ட முறையில்

இறுதிச் சடங்குகள்

கென்னடி குடும்பத்தின் விருப்பம்

வாஷிங்டன், ஜூன் 8

காலஞ்சென்ற செனேட்டர் ரூபேட் கென்னடியின் பூதவுடலை, நேற்று வாஷிங்டனில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து, தமது இறுதி அஞ்சலியை அளித்தனர்.

ரூபேட் கென்னடியின் இறுதிச் சடங்குகளைத் தனிப்பட்ட முறையில் நடத்துவதெனக் கென்னடி குடும்பம் விருப்பம் தெரிவித்துள்ளதாக அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்துள்ளது. விசேஷ தூதுவர்களை வரவேற்கும், கென்னடியின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக இங்கு அனுப்ப வேண்டாமென ராஜாங்க இலாகா வெளிநாட்டு அரசாங்கங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

கொலைஞனுக்குப் பல கொலைப்பயமுறுத்தல்கள்

இதற்கிடையில், கென்னடியைக் கொலை செய்ததென்ற குற்றச் சாட்டு, 24 வயதான ஷெரான் ஷஷ்ரா ஷெரான் என்னும் அரபு இளைஞன் மீது, லொஸ் அஞ்செல்ஸ் பொலிஸாரால் சுமத்தப்பட்டுள்ளது.

ஷெரானைக் கொலை செய்யப் போவதாகப் பல பயமுறுத்தல்கள் கிடைத்துள்ளன. பொலிஸார், ஷெரானைப் பலத்த காவலில் வைத்துள்ளனர்.

தேடப்பட்ட இளம் பெண் பொலீஸாரிடம் சரண்

ஆனால் கொலையில் தொடர்பில்லை

ஷெரானுடன் காணப்பட்டதாகக் கூறப்பட்டவரும், பொலிஸாரால் தேடப்பட்டவருமான இளம் பெண், பொலிஸாரிடம் தானாகவே வந்து தன்னை ஒப்படைத்துக் கொண்டாள்.

ஆனால், இப் பெண்ணுக்கும் கென்னடி கொலைக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லையென்றும், கொலை நடந்த இடத்தில் பார்த்துக் கொண்டு நின்ற போது, நரம்பு வலிப்பு ஏற்பட்டு, அவர் ஒருவிதமாக நடந்து கொண்டாரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பெண் மீது எவ்விதக் குற்றச்சாட்டும் சுமத்திக் வைது செய்யும் நோக்கம் தமக்கில்லை எனவும் அவர்கள் அறிவித்தனர்.

மயிலிட்டி-குருநகர் மீனவர் பிரச்னையின் எதிரொலி

புதிய சட்டம் அமுலாகலாம்

காங்கேசன்துறை, சனி

மயிலிட்டி குருநகர் மீனவர் பிரச்னைப் போன்ற பிரச்னைகள் நாடு பூராவிலும் நடைபெற்று வருவதால் அவற்றைப்போக்க இதுசம்பந்தமாக ஒரு சட்டம் அமைக்கவிருப்பதாகத் தெரிகிறது.

மயிலிட்டியில் குருநகர் மீனவர் மீன்பிடிக்கச் சென்று அங்கு தங்கி அமைப்பதுபற்றி ஆராயுமுகமாக கைத்தொழில் மீன்பிடி அமைச்சினால் நியமிக்கப்பட்ட தனிநபர் கமிஷனரான திரு. எஸ். கிருஷ்ணதாசனின் விசாரணை முடிவுக்குப் பின்னரே இம் முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதுபோன்றபிரச்னைகள் முல்லைத்தீவு, நீர்கொழும்பு போன்ற பல இடங்களில் நடைபெற்று வருவதாகவும் இதுசம்பந்தமாக அரசாங்கம் ஒரு சட்டம் அமைத்தே இப் பிரச்னையைத் தீர்க்க முடியுமென்றும், முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

மீன்பிடி அமைச்சு மிக விரைவில் ஒரு சட்டத்தை அமுலாக்கலாம் என நம்பப்படுகிறது.——

கானாவில் மத ஒற்றுமை

கானா, ஜூன் 8

கானா தேசத்தில் கிறிஸ்தவர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தினருடன் இஸ்லாமிய மதத்தினரும் ஒன்று சேர்ந்து முதல் முறையாக பிராத்தனையில் பங்கு கொண்டனர். கானா தேசத்தில் பெரும் பான்மை மக்களாய் உள்ளவர்கள் இஸ்லாமிய மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்ணுக்கு இருதய மாற்றுப் பொருத்தம்

டெக்ஸாஸ், ஜூன் 8

அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ் மாகாணத்தில், டெக்ஸாஸ் என்னுமிடத்தில், முதற்தடவையாக ஒரு பெண்ணுக்கு இருதய மாற்றுப் பொருத்தம் செய்யப்பட்டுள்ளது

ஓர் ஆணின் இருதயமே அப்பெண்ணுக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

வக்வெட்டித்துறை, சனி

வடமராட்சிப்பகுதி சுகாதாரப் பகுதியினரால் அல்வாய் மேற்குப் பகுதியில் போலியோ தடுப்புமருந்து கண் விநியோகம் செய்யப்பட்டது.

கண்டக்டரின் நேர்மை

புலோலி, சனி

பஸ்சில் தவறவிட்ட $11 ரூபாவை உரியவரிடம் கிடைக்கச்செய்தார் ஒரு கொண்டக்டர். பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச்சேர்ந்த திரு. இ. சிவஞானம் என்பவரே இ போ. ச. அதிகாரிகள்மூலம் பணத்தைச்சேர்ப்பித்தாராம்.

தென்புலோலியைச் சேர்ந்த கு. சீனிவாசகம் என்பவர் தாம் தவறவிட்ட தொகையை இ. போ. ச. டிப்போவில் பெற்றுக் கொண்டார் எனவும் இதே கொண்டக்டர் முன்பு ஒரு முறை பஸ்சில் கண்டெடுக்கப்பட்ட தங்க மோதிரம் ஒன்றையும் உரியவரிடம் சேர்ப்பித்தாரெனவும் தெரிகிறது,

கல்வி மந்திரி விஜயம்

அனுராதபுரம், சனி

கல்வி அமைச்சர் திரு. ஜ. எம். ஆர். ஏ. இரியகொல்ல இன்று அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்படுகிறது. இங்கு விஜயம் செய்யும் இவர் பாடசாலைகளின் பயிர்ச் செய்கையின் முன்னேற்றம் பற்றியும் ஆராய்வார்.

மொழிவழித் தொழிற் சங்கங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மொழிவழித் தொழிற் சங்கங்களை இன்றுபல பிரச்னைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. சிங்களம் மட்டும் சட்டப் பாதிப்பே இதில் முக்கியமானதாக வுள்ளது. இவைகளை எதிர்த்துப் போராட மொழிவழித் தொழிற்சங்கங்கள் தயாராயிருத்தல் வேண்டும்."

இவ்வாறு தறைமுக நாவாய் இயக்குனர் கழகத்தின் 5-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் திரு எஸ். கோடீஸ்வரன் தெரிவித்தார்

மேற்படி மன்றத்தலைவர் திரு. பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. கோடீஸ்வரன் மேலும் பேசுகையில் சிங்களம் மட்டும் சட்டத்தால் தமிழ் பேசும் ஊழியர்கள் பாதிக்கப்படாது பாதுகாக்கவே மொழிவழித்தொழிற் சங்கங்கள் உழைத்துவருகின்றன வென்றும் சிங்கள தேர்ச்சிக்காகப் புதிய அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலக்கெடு இம்மாதத்துடன் முடிவடைந்த பின்னரே பெரும் ஆபத்து இவ் ஊழியர்களை எதிர் நோக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்க கட்டுத்தாயன ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஐ. தி. சம்பந்தன், ருரு. க. இராமநாதன் உட்பட இன்னும்பலர் பேசினார்கள். [ஈ. நி.]

சித்திரக் கண்காட்சி

ஊர்காவற்றுறை, சனி

வேலணை அரசினர் மத்திய மகா வித்தியாலய சித்திர ஆசிரியர் திரு. அ. இராசையாவினால் ஏற்பாடுசெய்யப்பட்டு இம்மாதம் 16 ம் திகதி தொடக்கம் 18 ம் திகதி வரை யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் காட்சிக்கு வைக்கப்படும். இக் காட்சியை வடமாகாண விவசாய பிரதி திரு. எஸ். தணிகாசலம் திறந்து வைப்பார்.

நாகேந்திரமடம்

தொலைபேசி சேவை ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டுக்கோட்டை நாகேந்திரமடம் உப அஞ்சல் நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தொலைபேசித் தொடர்பு சேவை ஆரம்ப விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை நாகேந்திர மடசனசமூகநிலையத்தலைவர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். உள்ளூராட்சி அமைச்சர் திரு மு. திருச்செல்வம் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

வட்டுக்கோட்டை எம் பி. திரு அ. அமிர்தலிங்கம் திரு மதி அமிர்தலிங்கம் வடபகுதி அஞ்சல் நிலையங்களின் மேலதிகாரி திரு ரி. தர்மலிங்கம், தொலைபேசிப் பகுதி பொறியியலாளர் திரு ரூபேட் பேசுதாசன் வலிமேற்குச் சாரிய திரு உட்பட இன்னும்பலர் உரை நிகழ்த்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

[ந. நி]

பஸ் நிலையத்தில் ஜேப்படி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசாங்க ஊழியர் ஒருவரின் காற்சட்டைக்குள் இருந்த பணம் ஜேப்படி செய்யப்பட்டதாம் இச்சம்பவம் யாழ் பஸ் நிலையத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் கருணாகரன் என்பவரிடமிருந்தே சுமார் 300 ரூபா பணம் ஜேப்படி செய்யப்பட்டதாக பொலிஸ் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஈ. நி]

"பிரான்ஸ் குழப்பத்துக்கு காரணம் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியே"

டெலிவிஷன் உரையில் டி கோல் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு

பாரிஸ், ஜூன் 8

பிரான்ஸில் அண்மையில் ஏற்பட்ட தொழிலாளர், மாணவர் குழப்பங்களுக்குப் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியே காரணமென பிரெஞ்சு ஜனாதிபதி டி கோல், நேற்று டெலிவிஷனில், நாட்டு மக்களுக்கு விடுத்த உரையொன்றில் குற்றஞ் சாட்டினார்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன், பரவலான மாணவர் ஆர்ப்பாட்டங்களைப் பிரஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி கட்டவிழ்த்து விட்டதாக டி கோல் கூறினார்.

கம்யூனிஸ்ட் கட்சியை அவர், 'தெரு ஆர்ப்பாட்டங்கள் மூலம் பதவியை நாடும் ஒரு சர்வாதிகார நிறுவனம்' என வர்ணித்தார்.

மாணவர்-பொலிஸ் மோதல்

டெலிவிஷனில் டி கோல் தோன்றிய அதே சமயம் பாரிஸ் நகரின் ஒரு பகுதியில், மாணவர்களும் தொழிலாளர்களும் கலகப் பொலிஸ் படையினருடன் மோதினர்.

பிரான்ஸில் நடந்த அரசியல் குழப்பத்தையடுத்து, நிலவரத் தற்காலிகமாக வைத்திருப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

பிரான்ஸிக், மன், ரயில் போக்குவரத்துச் சேவைகள் பெரும்பாலும் வழக்கமான நிலைக்கு வந்து விட்டன.

மோட்டார் கார் தொழிற்துறை, எஞ்சினியரிங் தொழில் ஆகியவை தான் இப்போதும் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

——

"நேர்மை மன்றங்களை வளர்க்கும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"பதவிப் போட்டிகளாலும் ஒற்றுமையின்மையாலும் எத்தனையோ மன்றங்களும், வாசிகசாலைகளும், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவதை நாம் நாளாந்தம் அறியக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் நேர்மையான உழைப்பு அங்கத்தவர்களிடம் இருந்தால் மன்றங்கள் வளரும் என்பதில் ஐயமில்லை".

இவ்வாறு 'பெஸ்கி' அறிவியல் மன்றப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் திரு எம். செல்லத்தம்பி குறிப்பிட்டார். திரு. எஸ். இராசாதலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அரை மேலும் பேசுகையில் இக் கழகம் வளர்வதற்குரிய காரணம் இதை நிர்வகிப்பவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காகவும், விடுதலைக்காகவும் உழைப்பதாலேயே என்றார்.

பின் வருவோர் நடப்புவட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- எஸ். இராஜா, உபதலைவர்:- எஸ். நிரவியம், செயலாளர்:- எஸ். துரைசிங்கம். (ந. நி)

குடிபானங்களுக்கு பிளாஸ்டிக்போத்தல்

ஸ்டொக்ஹோம், ஜூன் 8

ஸ்வீடிஷ் கம்பனியொன்று, பியர்முதலிய குடிபானங்களை வைப்பதற்கு, பிளாஸ்டிக்கினாலும் பேப்பரினாலும் செய்யப்பட்ட போத்தலொன்றை முதற்தடவையாகத் தயாரித்துள்ளது.

தீயில்வெந்த கிழவர்

ஒருவர் கைது 9 பேரை பொலிசார் தேடுகின்றனர்

ஹம்பசிட்டி, சனி

சண்டிலிப்பாயில் நான்கு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு கே. வைத்தி வயது 75 என்ற வயோதிபர் வீட்டுக்குள் நித்திரையிலிருந்த போது கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக சங்கானைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் எஸ். துரைராசா என்ற நபரை கைது செய்து மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். இவரை இம் மாதம் 11-ம் திகதிவரை றிமாண்டில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார் மேலும் ஒன்பது நபர்களை பொலிசார் தேடுகின்றனர்.

இன்னுமொரு [illegible] குமாரராஜா, ஏ. மரிதாஸ்யம், [illegible] எஸ். துரை [illegible] தினம். (ந. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம், பருளாய் சிவசுப்பிரமணிய

பருளாய் முருகன்

நமக்கு வேண்டுவனவற்றையெல்லாம் தருவதற்கு இந்த ஊரிலே இந்த உலகத்திலே யார் இருக்கிறார்? நாம் விரும்பும் ஒன்றை ஒருகால் ஒருவர் இருவர் தருவார். எல்லாவற்றையும் தருவாரோ? தாம் தரக்கூடிய பொருளையே ஒரு முறைக்கு மேலும் சென்று கேட்டால் அப்பொழுதும் மறுக்காமல் தருவாரோ? அது சந்தேகத்தான் இந்நிலையில் நமக்கு வேண்டியன எம்மாவற்றையும் எல்லாச்சமயத்திலும் தருதற்கு ஒருவர் நாம் செய்த புண்ணியப் பயனாக இருக்கவே இருக்கிறார். அதுமட்டுமல்ல. அவர் நம்மை வழிபார்த்து, மட்டற்ற ஆர்வத்தோடும் இருக்கிறார். அத்தகைய பிரபு—வள்ளல் எங்கே இருக்கிறார் என்பதை அறிவதே ஒரு பெரிய அதிர்ஷ்டமல்லவா? விரும்பியவற்றைக் கொடுப்பவன் வரதன். கலியுகவரதன் எனப்படுபவன் முருகன். அந்த முருகப்பெருமான் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணி முதலாம் குன்றுகள் பழமுதிர்சோலை எனும் ஆறுபடை வீடுகளில் அமர்ந்து, அங்கே அடிமேல் அடி வைக்கின்ற அடியார்களுக்கெல்லாம் அருள் செய்தவண்ணம் இருக்கின்றான். அவ்வளவோடமையாது அடியார்கள் மேல் வைத்த பெருங்கருணையால் அடியார்கள் குடியிருக்கும் இடமெல்லாம் கோயில்கொண்டும் இருக்கிறான். பிள்ளைக்குச் சிரமங்கொடுக்க விரும்பாத அன்னை அது இருக்குமிடம் தானே சென்று அன்னமூட்டுகிறாள். அதுபோல தாயினும் நல்ல தலைவராகிய முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்தற் பொருட்டு பருளாய்ப் பதியிலே கோயில்கொண்டருளி இருக்கின்றார். யாழ்ப்பாண நகரிலிருந்து மேற்கே பத்துக்கல் தூரத்திலுள்ளது சுழிபுரம். அந்தச் சுழிபுரத்திலே அழகிய மருதவைப்பாக உள்ளது பருளை. வள்ளுப் பிரபந்தத்திலே சின்னத்தம்பிப் புலவர்க்குப் பாட்டுடைத் தலைவராக வாய்த்த விநாயகப் பெரு

மானுக்குப் பக்கத்திலே வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் ஈந்தருளும் பொருட்டுக் கலியுகவரதராம் முருகப் பெருமானின் கருணையே ஓர் வடிவமாகக் கோயில் கொண்டருளியுள்ளார். இவ்வாறு நமக்காக, நம் மத்தியில் நம்மை எதிர்பார்த்து எழுந்தருளியிருக்கும், நல்லவர்களுள் நல்லவரான ஒருவரை—அருள் முருகனை நாம் சென்று தரிசிக்காமல் விடலாமா?

சுழிபுரத்தில் மனைகளைக் கடந்து வடக்கே சென்றால் வயல்கள் காட்சியளிக்கும். அவ் வயல்களின் மத்தியிலே ஒரு சோலை நம் கண்ணைக் கவர்கின்றது. அச் சோலையின் நடுவில் அமைந்த ஆலயம் நம் மனதைக் கவர்கின்றது. முன்னதாகத் தெரிவது முத்தபெருமான் ஆலயம். அதன்பின்னே தோன்றுவது நாம் நாடும் பிள்ளைப் பெருமான் பெருங்கோயில். கோயிலைக் கண்டதுமே கும்பிட்டு அருள் பெறவேண்டுமென்ற ஆசை பெருகுகின்றது. வேண்டியவற்றையெல்லாம் பெறலாம்என்று எண்ணி எண்ணி உள்ளம் விம்முகின்றது. கால்கள் விரைகின்றன. முதலிலே முத்த பிள்ளையாரை முறைப்படி தாழ்ந்து வணங்குகிறோம், எண்ணியன எல்லாம் நாம் எய்தவேண்டும் என அப்பெருமானை வேண்டுகின்றோம். அப்பால் சற்று நகர, அழகான அலங்காரமான தேர் காட்சியளிக்கின்றது. அத்தேரின்மேல் உயர்த்துக்கட்டிய சேவற்கொடி "வாருங்கள் இது நல்ல சமயம்" என நம்மை வாஞ்சையோடு அழைத்து வரவேற்கின்றது. ஆம், இன்று வைகாசி விசாகநாளல்லவா? கங்கையினால் தாங்கப்பட்டுக் காங்கேயனானவன்- கார்த்திகைப்பெண்களால் பாலூட்டப்பட்டு கார்த்திகேயன் என்னும் அருமைப் பெயர் பூண்டவன்—விசாக நன்னாளைத் தனக்குரிமையாக்கி விசாகன் எனப் போற்றப்பட்டு விளங்கும் அம்முருகன் அந்த விசாக நன்னாளிலே திருத்தேரூர்ந்து பவனி வரப்போகின்றான். நமக்கு அருள்புரிவதற்காகவே வெளிவந்து வீதியில் காட்சியளிக்கத் திருவுளங் கொண்டுள்ளான். ஆகவே இது நல்ல சமயம்'' என்று அழைத்த அந்தச் சேவற்கொடிக்கு, நன்றியுணர்வோடு நாம் சிரந்தாழ்த்துகிறோம்.

கோயிலின் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் எங்கே பார்த்தாலும் அங்கெல்லாம் அன்பர் கூட்டமே தெரிகின்றது. ஆறுமுகப்பெருமானின் வீறுமிகு புகழே பேசப்படுகின்றது. நீங்கி வெளியே எழுந்தருளிமாயும், குருடராயும், முதுவருகின்றான். பூரண சந்திரமையாயும், நோயாயும் நிலையைக் கண்டு கடலாஅணுகமாட்டாது தூரத்தே எது பொறிகுவது போல ஆவலோடிருக்கும் அடியார் ஆறுமுகப்பெருமானின் அழகினைத் தேடி அருள் கொடுக்கிய திருவுருவினைக் கண்டுகொள்ளாக, அந்த அடியவர்களாகிய சமுத்திரம் அழகிய அற்புதத்தேர்நின்றாரம் ஆனந்தத்தாற் பொங்கிநின்று சென்று கொண்டிருக்கலை மோதுகின்றது. 'முண்கின்றது. அத்தெய்வத்டகமலர்த்தன்ன முகருதேரினை ஆனையே குதிமுகமும் கண்ணும், குண்டலரையோ இழுக்க அடியார் நிரையும், பசும் பொன்பார்த்திருப்பாரா? அன்மௌலியும், கோரமார்பும், பெனும் வடத்தினைப் எண்கருகரம் ஈராறும் இலங்பூட்டி அடியார்களே ஆசை செழிற் படைகள் மாவும், பெருக இழுத்துச் செல்கின்றண்டையும், கிலம்பும் ஆர்ஏனர்.

க்கும் சரணமும்' தெரியக் மேரு அசைந்து வருவது கண்ட அன்பர்கள் அப்பெரோல வீதியின் நாதிபுறருமானைக் கண்டு கண்டுமகிழ்மும் கற்றி வரும் திருத்தேவதற்கு இரண்டு கண்களின் அடியொற்றி, ஈசன்

பவனிவருகிறான்

- வித்துவான் ஜொன். முத்துக்குமாரன் -

சிரிப்பார், களிப்பார், தேனிப்பார், திரண்டு திரண்டு திருவார்த்தை விரிப்பார், கேட்பார், மெச்சுவார். என்ன அறிபுதம்! என்ன அறிபுதம்! தெய்வத்தைத் தரிசிக்குமுன்னமே நாம் இத்தகையதிவ்யமான அனுபவத்தைப் பெற்று விடுகிறோம்.

இறைவன் அருளைப் பெறுவதாரூன் முதலில் அடியார் கூட்டத்தை அடையவேண்டும் என்பர் ஆன்றோர் நாம் இங்ஙனம் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் பெற்று முன் ஒருபோதும் அறியாததொரு தெய்வானுபவத்தைப் பெற்றுத் துளைத்திருக்கையில், கோபுரவாயிலிலே ஒரு ஜோதி தோன்றமாகின்றது. அருவுருவாய் முதலில் தோன்றிய அந்த ஜோதி மெல்ல மெல்ல அறுமுகப் பெருமானின் அழகிய திருக்கோலமாய்க் காட்சியளிக்கிறது. இரத்தினமயமான பதிமாசனத்தில் 'மறுவில் கறிபின் வாணுதல்' ஒருபுறமும் 'குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளி' மறிருறு புறமுமிருப்ப எந்தை கந்தவேள் இருக்கும் காட்சிக்கு எதனை உவமை சொல்வது செந்தாமரையின் அழகினைவென்று எம் சிந்தையெல்லாம் கவர்ந்த திருமுகங்களின் பொலிவினை என்னென்பது? அத்திருமுகங்கள் பொழியும் கருணைப் பிரவாகத்தினை எப்படிப் புகழ்வது?

ஆறுமாமுகங்களும் பன்னிரண்டு திருத்தோள்களும் அருள் ஞானவேலும் கொண்டு தாரிணார் இருவரிபாகமாக நம்மை ஆண்டருளும் நாதன் ஆடி ஆடி, அசைந்து அசைந்து வாயில் அடியார் சிலர், நண்ணினர்க்கு இனியாய் ஓலம். ஞானநாயகனே ஓலம, பண்ணவர்க்கு இறையே ஓலம்' பரஞ்சுடர் முதலே ஓலம், எண்ணுதற் கரியால் ஓலம், யாவையும் படைத்தாய் ஓலம், கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம் எனத் துதிப்பவராயினர் அடியார் சிலர். இவ்வாறு பாடுவாரும் பரவுவாரும் ஆடுவாரும் அஞ்சலி செய்வாருமாகிய அடியார் புடைசூழ எழுந்தருளிவரும் செவ்வேட்பெருமான் சித்திரத் தேரில் இவர்ந்தருளுகின்றார். கையும்புனை அஞ்சலியனவாகவும் கண்ணும் பொழிமழை ஒழியாதனவாகவும் அன்பர் அக்காட்சியைக் கண்டு ஆனந்த பரவசராகின்றனர்.

திருத்தேர் மெல்ல நகரத் தொடங்குகின்றது. முடபோதா, நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகன் என்று ஆராமை கொள்கிறார்கள். இவனமும் முனிவர் தேவர் வாவரும் இனையன் என்றே உன்னரும் தலைமைத்தாகும் ஒரு தனிக்குமரன் தன்னை அன்பர்கள் தம் இருவிழியாற் காண்கின்றனர். கண்ட மாத்திரத்தே அவர்களது உள்ளத்தில் முன்னிருந்த காதல் பன்மடங்காகப் பொங்கித் ததும்புகின்றது. இக்காதல் மிகுதியால் அறுமுகத்து எந்தையைச் சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அகிலை, தாழுதல் வேண்டும் சென்னி, துதித்திடல் வேண்டும் நாவு என்று மாறி மாறி ஆசைப்படுவதும் ஆசையோடு சேவிப்பதும் அப்பொழுதும் ஆசை தீராது ஆழ்ந்த அன்பில் திளைப்பவருமாயினர்.

பருளாய் முருகன் பவனி வருகின்றான்! பார்க்க வாருங்கள்.

மனம்போல்

பண்டித

பொல்லினையும்

இன்னமுதை
முருகா முருகா
வருமே மவர்

கந்தா கடம்பா
மைந்தா திரு
பருளையிலெம்
உருவகையெ

சுழ

யாழ்ப்பாணப்
நிலிருந்து பத்துமைல்
திக் வடமேற்கில்
ஓர் எல்லைக்
அமைந்திருப்பது சு
என்னும் ஊராகும்.
யர் என்போர் இக்
உறைந்தமையால்
புரமெனப் பெயர்
பட்டது. சோழிபுரம்
பது சுழிபுரம் என
விற்று எம்பர்
இவ்வூர்
இன்றுவரை
மும் தழைத்தோங்கும்
மாகவே
றது!
ஆட்சி நம்மவரின்
பற்றிற்கு
முடியவில்லை.
விநாயகர் ஆலயம்
இடிக்க முயன்றா

— சுழிபுரம்

போர்த்துக்கேய
காமாக
விநாயகர்
ணைக் கொத்தி
தடுத்ததோடு
கொத்திய
பிள்ளையார்'
மும் பெற்றார்.
இங்குள்ளோர்
யாற்றிய
பதை
புகழ் விசும்
நல்லூர்ச்
புலவர்
இவ்வூர் மக்
வையே
கொண்டவர்கள்.
கடலோடித்
தேடும்
வம்
ஆனால்

யாழ்ப்பாணம்

—ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணம் கட்டுமுறை

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்பும் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 7 விகிதமும், 8 விகிதமும், 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலம் அறிந்துகொள்ளலாம்.

Std 14 மனேச்சர்

அன்பளிப்பு

அந்திய காலப் பண உதவிச் சங்கம்

சுழிபுரம்

எல்லா வித

அச்சு வேலைகளுக்கும்

ஒரு சிறந்த ஸ்தாபனம்

ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தந்தி: 'அச்சகம்' தொலைபேசி: 348

எமது சிறந்த தரமானிப்புகளான பேரேடு, குறிப்பு மற்றும் கணக்குப்பதிவுப் புத்தகங்களும், பாஸ் புத்தகங்களும் தொகையாகவும், சிலவறையாகவும் கிடைக்கும்.

அழகு நிறைந்த அச்சு வேலைகள்,
குறைந்த செலவில், குறித்த நேரத்தில்
சிறப்புறச் செய்யும் இடம்

ராஜா அச்சகம்

உரிமையாளர்: அ. சேனாதிராஜா

ராஜா அச்சகம், புத்தகசாலை

பிரதான வீதி, சங்கானை

குறிப்பு: ஷை ஸ்தாபனத்திற்கு அச்சுவேலை தெரிந்த வர்கள் தேவை. நேரிலே தொடர்புகொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ரிய சுவாமி ரதோற்சவ சிறப்பிதழ்

...போல் நல்வாழ்வு வரும்
...ண்டிதர் அ ஆறுமுகம்

...ளையும் பூமியெனப் போற்றும்
பருளையில்வாழ்
...தை யார்க்கும் இனியானை-அன்பால்
...முருகா எனஉருகு வார்க்கு
...மனம்போல்நல் வாழ்வு.

...டம்பர கதிர்வேலா வார்த்திகையர்
திருமால் மருகோனே-எந்தாய்
...மெம் அப்பா பழவினைத் துன்பம்
...யெல் லுள்ளதி துறை.

தெய்வீக வாழ்வுக்கு வழிகாட்டும் திருப்பருளாய்

ஆலைடக் வளைந்தடுத்த வெழுபுவி புரந்திருக்கு
மரசென நிரந்தரிக்க வாழலாம்
அளகையர சன்றனக்கு மமரரர சன்றனக்கு
மரசென அறஞ் செலுத்தி யாளலாக்க
மயிலையு மவன் றிருக்கை யயிலையும் மவன் கடைக்க
ணியலையு நினைந்தி ருக்க—வாருமே

"அருணகிரிநாதர்"

வாக்காலும் மனத்தாலும் தொடுதற்கரியவனும் பேரழகனும் பெருவீரனும் பெருவள்ளலுமாகிய முருகப் பெருமானைவேதங்கள் துதிக்கின்றன. அரிபிரமேந்திராதி தேவர்க துதிக்கின்றார்கள் தமிழர்தம் தனிப்பேரிலக்கியங்களாம் பரிபாடல் முதலாய சங்க நூல்கள் போற்றுகின்றன.

சச்சிதானந்தப் பிழம்பாகி வேண்டுவார் வேண்டுவதெல்லாம் ஈந்தருளும் விமலனாகி சர்வலோக நாயகனும் பரமேஸ்வரன் லோகமாதாவாம் உமையம்மை இவரினின்றும் வேறாகாத தனிப் பெருங்கருணை வடிவினனாகி விளங்குகின்றஸ்ரீ சுப்பிரமண்யப் பெருமான் குமரி முதல் திருவேங்கடம் வரை புள்ள செந்தமிழ் நாடெங்கும் கோவில் கொண்டுள்ளான். தமிழர் எங்கெங்கு வாழ்கின்றனரோ அங்கெல்லாம் அம்முருகனுக்கு ஆலயங்களுண்டு தூயதமிழ் வழங்கு மிந்நாட்டிலோ கதிர்காமம் முதல் எங்குபார்த்தாலும் அவன் திருக்கோயில்களே.

செந்தமிழ்ப் பாமலர்களை பலசொரிந்த நல்லைச் சின்னத்தம்பிப் புலவர் தம்வாயில் "தொல்லுலகம் போற்றும் சுழிபுரம்' எனப் புகழ்ந்து பாடப்பெற்ற ஊர்சுழிபுரம். சைவ ஒழுக்க முறை சிறந்த உயர்குடி மக்கள் நிரம்பியது. நீர்வளம் நிலவளம் மிக்கது. புறச்சமய சூறாவளி தாக்காதது. இத்தகைய சுழிபுரத்தில் தெய்வீக வாழ்வு வாழ்வார்க்குகந்த இடமாகத் திகழ்வது பருளை என்னும் திருப்பதி. இங்கு ஆனைமுகத்தோனும் ஆறுமுகத்தோனும் வலமிடமாகக் கோவில் கொண்டெழுந்தருளி யுள்ளார்கள். சின்னத் தம்பிப்புலவர் பாடிய

திருப்பருளாய்

மிக மிக மூத்ததும் சரித்திரப் புகழ் வாய்ந்ததும் வேப்பமரத்தோடு கூடியதுமாகிய வெள்ளரச மரமும் தரமரைத் தடாகமும் இரண்டாம் பிரகாரத்திலிருக்கின்றன. இத்தடாகம் தேனெனும் சுவையுடைய தான பளிங்கு போன்ற நீர் நிரம்பியது. இதில் மூழ்கி அரசமர நிழலில் வலமாக வந்து முருகன் சந்நிதியில் வீழ்ந்து வணங்கி தீராநோய் தீர்த்து பெறற்கரிய பேறுகள் பெற்றோர் பல்லாயிரவர்.

பருளை விநாயகர் பள்ளு இவ்விநாயகப் பெருமானுக்குரியது. எத்திசையில் நின்று நோக்கினாலும் ஒரு மரகத மலையை நிகர்ப்பது இத்திருத்தலம். பசிய நெல் வயல்களின் மத்தியில் உயர்ந்திருப்பது வானோங்கி உயர்ந்த தென்னைகளும் வாழைகளும் தலையசைத்து நல்வரவு கூறி நிற்பன. இங்கே பரந்து உயர்ந்திருப்பது முருகப்பெருமானது, திருக்கோவில். காலத்தாள் பெருகள் எழுதிவடக்கா தலை. திராத பிணி தீர்த்தோர். வறியாத செல்வம் பெற்றோர் வாழ்வில் பயனாக மகப்பேறு பெற்றோர் குடிவிளங்கப் பொற்கொடி பெற்றோர் குலம் விளங்க நல்லாண்டமை பெற்றோர். நன்னீர்க் கடலனைய கல்வி பெற்றோர் நற்கணவன் பெற்றோர், மாங்கல்யப்பேறு பெற்றோர் எனப்பல வகையிற் பரந்து நிற்பர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறந்த இப் பதியை சிவப்பிரகாச

— சு. சண்முகரத்தின சர்மா பருளாய் —

...ணப் பதினாறு ...துமைல் தூரத் ...றில் கடலினை ...ாகக்கொண்டு ...பது சுழிபுரம் ...ராகும். சோழி ...ர் இங்கு வந்து ...ாக சோழிய ...ண்டு வழங்கப் ...ழியபுரம் என் ...ம் என மரு ...பர் சான்றோர். ...ன்றுமுதல் ...சைவமும் தமி ...தோங்கும் இட ...காணப்படுகின் ...ு மதுரை ...வர் ...வனின் சமயப் ...ஈடுகொடுக்க ...இங்குள்ள ...லயம் ஒன்றை ...ன்றான் ஒரு

...வனைப் பொய்கை சுழிபுரம் பருளாய்

...க்கொண்டு திருவாய்ந்த சுழிபுரத்தில்' என எதிர் மொழிகிறான் புலவன்.

இவ்வூர் பச்சைப்பசேலென்ற வாணளாவிய சோலைகளைத் தன்னகத்தே உடையது. இதனைக் கண்ட புலவன் கண்கள் 'கமல மலர் வயல் சூழ் சுழிபுரம்' என்றும் 'தோட்டவளஞ் சிழும் சுழிபுரம்' என்றும், 'தேனாடு மலர் சோலை சேர்ந்த சுழிபுரத்தில்' என்றும் பாடியிருப்பது இராம இலக்குமணர் கண்ட மருதநிலக் காட்சியை இது தோற்கடித்துவிட்டது என்பதைக் காட்டுகின்றது.

இவ்வகையான பல்வகைச் சிறப்பும் வாய்ந்த இவ்வூரிலே பருளை என்னும் பதி ஒன்றுளது. அங்கு மேலே கூறப்பட்ட வினை

— சுழிபுரம் கு. இளவழகன் —

...கேய அதிகாரி. உருவெடுத்த ...னது கண் ...தி இடிக்காது ...டு 'கண்ணைக் ...ாக்காய்ப் ...என்ற பட்ட ...ர்.

...ளார் அரும்ப னி ...சிலர்கள் என் 'திக்கெல்லாம் ...சுழிபுரம்' என ...சின்னத்தம்பிப் ...ந்துள்ளார்.

...மக்கள் உழைப் ...உயர்வாகக் ...ர்கள். திரை ...திரவியம் ...ல்லவர்கள். செல் ...ியாதென்பர். ...ணமெனநினைத்

...லகளை, ...நேரத்தில்

...ம்

...ராஜா

...ுகசாலை

சங்கானை

...வலை தெரிந்த ...ர்புகொள்க.

தீர்க்கும் விநாயகனும், வடபால் முருகனும் எழுந்தருளிய ஆலயங்கள் இரண்டுள. தமிழரசார் காலத்திலேயே கட்டப்பட்ட தொன்மைவாய்ந்த விநாயகர் ஆலயம் இங்கிருப்பது பெருமைக்குரியதே. "சேயோன் மேய மைவரை உலகமும்" என்பது தொல்காப்பியர் கூற்று. குன்றேறிய குமரன் வயல்சூழ் பருளையின் வளங்கண்டு விநாயகனின் வடபால் அமர்ந்திருப்பது பருளையின் சிறப்பினாலன்றோ. பருளை பற்றிப்புலவர் 'சுந்தரஞ்சேர் பருளை' எனவும், மண்டலமெங்கும் புகழும் பருளை' எனவும், தேவாரத்தையே மிஞ்சிவிட்டமையால் 'இந்திரன் புகழ் பருளை' எனவும்

குற்றமே காணமுடியாமையால் 'பங்கமில் சீர்ப்பருளை' எனவும், அதனால் 'பல்லோர் தொழு பருளை' எனவும் பாடியுள்ளமை நக்கீரன்றுகளாகும். வயல்வெளிகளிலே நின்று இரவேளையில் இவ்வாலயங்களின் திருவிழாக்களின் போது பார்த்தால் மலையின்மேல் அலங்கரிக்கப்பட்ட நகரமாகக் காட்சி கண்முன் வரும்.

இவ்வாலயங்கள் ஆண்டுதோறும் உற்சவங்களாகவே காட்சிதரும். இங்குள்ள விநாயகர் ஆனி உத்தரத்தன்று இரதத்தில் காட்சி தருவார். முருகன் வைகாசி விசாகத்தன்று தேரூர்ந்து வருமக தருங் கண்கொள்ளாக் காட்சி கண்போரைக் கவிப்பூட்டும். இலட்சார்ச்சனை, கார்த்திகைத் திருவிழா, வைகாசித் திருவிழாத் தினங்கள், கந்தஷஷ்டி, மார்கழிப் பாவை நோன்பு ஆகிய விழாக்காலங்களில் முருகாலயமும் அதன் சுற்றுப்புறமும் 'கந்த' 'குமரா' 'முருகா' என்ற ஒலியோடு மக்கட் கூட்டமிகுந்து காட்சிதரும். மற்றைய தினங்களிலே' உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பியலே' என்றபடி வயல்களிலே வேலை செய்து களைப்படைந்து வரும் வேளாள மக்கள் கச்சிலப்பர் கண்ட சரவணப் பொய்கையோ என வியக்கத்தக்க பொய்கையில் மூழ்கி தம்களைப்பு நீக்கி முருகனை வணங்கி முறுவலிப்போடு செல்வர். இப்பொய்கை மேம்பும், வெள்ளரசு ஒருங்கே பெற்று தரமரைத் தடாகத்தினையுடைய தாய் பளிங்குக் கற்களால் நாலாபுறமும் கட்டப்பட்ட பொய்கையாகும்.

இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவர் இருவரும் பவனிவரும் தேர் சிற்பத் நிறமை வாய்ந்தது. இத்தேரின் அடிப்பாகத்தில் சிற்றின்ப நிகழ்ச்சிகளைச் செதுக்கியிருப்பது சிற்றின்பம் பேரின்பமாகிய இறைவனால் நசுக்கப்படும் வலிமையற்ற தென்பதையும், நிலையற்ற தென்பதையும் காட்டுகின்றது.

சுழிபுரம் பதியின் கடற்கரையிலே இராமபிரானது பாதம் வைக்கப் பெற்றதால் 'திருவடிநிலை' எனப் பெயர்பெற்ற தீர்த்த ஸ்தலம் அமைந்துள்ளது. கீரிமலையைப் போன்று இதுவும் தீர்த்த விசேடம் பெற்ற தலமாகும். இங்கு பருளை விநாயகர், முருகன், பொன்னாலை கிருஷ்ணன் கோயில்களின் தீர்த்த உற்சவங்களின் போதுமனற்பரப்பும், கடற்பரப்பும் மக்கட் கூட்டமாகவே காட்சிதரும். இத்தலம் நோயுற்றோர்க்குச் சுகந்தரும் திவ்விய தலமாகும். விசாக தினத்தன்று முருகனது இரத உற்சவத்தையும், தீர்த்த உற்சவத்தையும் கண்டு இன்புறுவாராக.

சிறந்த வேலைகள் குறித்ததவணையில்

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் அச்சுவேலைகள் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். நழைய புத்தகங்களும் கட்டிக் கொடுக்கப்படும்.

சுசீலாதேவி அச்சகம்

பிரதான வீதி, சித்தங்கேணி.

திருமண அழைப்பு

சுழிபுரம் பண்ணாத்தையைச் சேர்ந்த (மலையன் பென்னர்) திரு. ப. மயில்வாகனம் திருமதி பொ. மயில்வாகனம் ஆகியோரின் மகன் [கொழும்பு பிரதம தபாற்பிரிவு தபால் பொறியலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த] குலவிரசிங்கத்திற்கும் வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த [யாழ்ப்பாணம் இ. போ. ச.] திரு. நா. கந்தையா திருமதி இ. கந்தையா ஆகியோரின் மகள் இராசலட்சுமிக்கும் 10-6-1968 திங்கட்கிழமை காலை 9-05—9-53 மணிக்குமிடையில் மணமகன் இல்லத்தில் இந்து மத ஆசாரப்படி திருமணம் நடைபெறும். (21)

எம்பெருமான் பவனிவரும் தேர் பண்டைப் பெருமை மிக்க சிற்பவேலைப்பாடுகளுடையது.

இலங்கையிலேயே இத்தகைய பழைய சிறந்த சிற்பவேலைப்பாடுகள்கொண்டமைச் சிறந்த தேர் இதுதான் என்பது மறைந்த கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்கள் கருத்து. ஆறுமுகப்பெருமான் வசந்த மண்டபத்தில் அந்தணர்கள் துதிபாட அர்ச்சிக்கப்படும் காட்சியும் பொன்மயமான சிங்காசனத்தில் முத்துக் குடைநிழற்ற அரோகரா எனுமோசை விண்ணதிர முன்னேசங்குகள் முழங்க மங்கள வாத்தியங்கள் ஒலிக்க வெண்சாமரங்கள் வீச, பன்னீரும் பனிமலரும் மழைபெனப் பொழிய, பின்னே பேராயிரம் பரவிப் பாடுவோரும் வாடி, ஆடுவோரும் கண்ணீர்பொழிந்து உருகி அரிகரப்பிரதக்ஷணம் செய்வோரும், அடியளிப்போரும் ஆய கூட்டம் தொடர்ந்து தெரிய பக்தர்களின் தோள் வரிசையில் அசைந்தாடிவரும்மாட்சியும் கந்தோற்சவமும் கண்டகண்கள் வேறொன்றைக்காணா. இத்தேர் விழாக் கண்டோர் அன்றே தம் மனத்துதோர்மீது இறைவன் இவர்ந்திருப்பதைக்கண்டு இன்புறுவர்.

இலங்கைக் கடற்கரைகள் முத்துடையவைமட்டுமன்று முத்திக்கு' வித்திடுபவையுமாகும். இப்பெருமான் தீர்த்த விழாக்காணும் கடலிடம் 'திருவடிநிலை' என்னும் பெயர் கொண்டிருப்பது இதற்குச்சான்றாகும். அங்கே எம்பெருமானுக்கெனவே வேயமைந்த "திருப்பேரவை" யும் அன்னதான மடங்களும் உண்டு. அன்று முழுவதும் தீர்த்த விழாவும், பூஜைகளும் அங்கேயே.

இவ்வாலயத்தில் தினசரி முக்காலப் பூஜைகளும் சங்கராந்தி, வார்த்திகை, கந்தசஷ்டி, திருவெம்பாவை, தைபூசம்முதலாய உற்சவங்களும், விசேஷ தீர்த்தோற்சவங்களும் நிகழும். மாசி மாச பூர்வபட்ச பிரதமை தொடங்கிய ஆறு நாள் முப்பொழுதும் ஷண்முகப்பெருமானுக்கு இலட்சார்ச்சனை நிகழும். இந்த ஆறுநாளுமிரவு ஷடாட்சர வேத மந்திர கோஷங்களும் திந்தமிழ் தோத்திரப் பாராயணங்களும், அபிஷேக அலங்கார, நிவாச, ஷோடசோபசார பூஜைகளும் ஆக தேவலோகமாகவே இவ்விடம் விளங்கும்.

சுழிபுரமும் இன்றைச் சூழ்ந்துள்ள கிராமங்களும் எம்பெருமானின் பக்தி காட்டப்பட்ட அடியார் கூட்டங்களாலே நிரம்பியவை. இவ்வடியார் கூட்டங்கள் முருகப்பெருமானிடம் வேண்டுதல் செய்து பெற்ற பெறுபண்டிதர் அருணாசலப் புலவர், ஆறுமுகச் சட்டம்பியார், விசுவநாதக் கிருஷ்ணர் முதலிய நற்றமிழ்ப் புலவர்கள் புகழ்ந்து வரலாறு பரிசில் பெற்றுள்ளார்கள். நீங்களும் பணிந்து இம்மையும் மைப் பயன்களை பெறவருங்கள் இந்திரராகிப்பார் மேலின்பமுற்றினது மேனிச் சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வீர்.

படத்திறப்பும் பாராட்டுவிழாவும்

மூவரின் ஆசிரியசேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர், திரு. ச. ஆம்பிலைபாகன், தணை அதிபர் திரு. கா. வைரமுத்து, தணை ஆசிரியர் திரு. த. சீனிவாசகம் ஆகியோர் கடந்த 32 ஆண்டுகளாக ஆற்றிய சேவையைப் பாராட்டுமுகமாக பாராட்டு விழாவொன்று இன்று மாலை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. வித்தியாலய மகாஜன மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்படும் இவ்வைபவத்தில் மூவரதும் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்படும். (வா. நி.)

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர் சங்கத்தின் காரியாலயத் திறப்பு விழாவும் நிர்வாக சபைக்கூட்டமும் இன்று நடைபெறுமென மேற்படி சங்கத்தலைவர் திரு. கா. ச. இளரரசா அறிவித்துள்ளார்.

இவ்வைபவத்தை திரு. ச. நடராசா ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து நடைபெறும் நிர்வாகசபைக்கூட்டத்தில் யாழ். மாநகரசபையின் நற்போதைய விசேட ஆணையாளர்களின் நிர்வாகம், கரையூர் வீடமைப்புத் திட்டவரைபடம், மின்சாரப் பிணைப்பணம் கூட்டியமை, தண்ணீர் வரி ஆகியனபற்றியும் யாழ் மாநகரசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு என்னநடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுஎன்பது பற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசனை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்படுகின்றது. (வா. நி.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாளைய மேதை!

கறிபனைக் கடலில் நெஞ்சம்
கனவது காணகண்கள்
பொறிபமை வண்ணம் காட்ட
புன்னகை வாயில் பூக்க
அற்புதப் பாப்பா இங்கே
அடக்கமாய் இருப்ப தெல்லாம்
விற்பன னாகி நாளை
விளங்குதற் காமோ? பாரீர்!

—இ. நா.

இனிய மணிகளே!

தினம் 'மலரு'க்கு வந்து குவியும் உங்கள் கடிதங்களும், தபாலட்டைகளும் உங்களின் உற்சாகத்தை எமக்கு உணர்த்துகின்றன. புதிய புதிய கம்சங்களைச் சேர்க்கவேண்டுமென்ற யோசனையைச் சில அங்கத்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்றதனை ஏற்று முடிந்தளவு நிவர்த்தி செய்கிறோம்.

வாழ்க்கையின் ஆரம்பப்படிகளில் காலடி எடுத்து வைத்துக்கொண்டிருக்கும் உங்கள் முன்னேற்றத்துக்கு வாராவாரம் இனியோசனை சொல்லித்தருகிறார், கணேஷ்! அவரது 'ஒரு படி உயர்வோமா' என்ற அருமை மான கட்டுரைத் தொடர் செல்ல வாரத்திலிருந்து இம் 'மலரி'ல் ஆரம்பமாகியிருக்கிறது.

போட்டி—1-க்கான முடிவு இம்மலரில் வெளியாகியுள்ளது. அடுத்த போட்டி அடுத்த மலரில் வெளியாகும்.

பதினெட்டு வயதுக்குட்பட்ட மாணவ மாணவிகள் 'மாணவ மலரி' அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளலாம். கீழே தரப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டிய முகவரி 'மாணவர் மலர்' சமநாடு', த. பெ. இல: 49, யாழ்ப்பாணம். அங்கத்தவர்கள் பெயர்களைதொடர்ந்து வாரா வாரம் பிரசுரிப்போம்.

நிறைய எழுதுங்கள்! உங்களுக்கு ஊக்கம் தந்து, உற்சாகப்படுத்தி உயர்த்திவைப்பதே 'மாணவர் மலரின்' நோக்கம். அடுத்த போட்டிவுக்கு முதல் நாள் சந்திப்போமே!

'மாணவர் மலர்' அங்கத்தவர் பத்திரம்

பெயர்: _____

வயது _____

பாடசாலை: _____

முகவரி _____

_____

வகுப்பு ஆசிரியர் கையொப்பம்

பரிசு போட்டி-1 முடிவு இதோ!

எமது முதலாவது பரிசுப் போட்டியில் நூற்றுக் திமானோர் பங்கு பற்றிக்கொண்டாலும், பன்னிரண்டு பேரே சரியான விடையை அனுப்பி வைத்துள்ளார்கள். எமக்கு முதல் கிடைத்த சரியான விடையை அனுப்பி 5 ரூபாவைப் பரிசாகப் பெறுபவர்:

ப. சண்முகதாஸ்
(அங் இல. 33)
நாயன்மார்க்கட்டு
யாழ்ப்பாணம்.

நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் பயிலும் இம் மாணவருக்கு எமது வாழ்த்துக்கள்.

இவரையடுத்து சரியான விடைகளை அனுப்பிய இருவர் வருமாறு:

o செல்வி சந்திரா தேவி, [அங். இல: 25] திருநெல்வேலி. செங்குந்தா இந்துக்கல்லூரி.

o செல்வி சாந்தி வேலுப்பிள்ளை, [அங். இல: 16], [மானிப்பாய் மகளிர்கல்லூரி].

சரியான விடை இதுதான்:-

ஆழ்ந்து சிந்தித்து ஆராயாதவர்கள் வாயால் உளறிக் கொண்டே இருப்பார்கள்.

அடுத்த வாரம் புதிய போட்டி ஒன்று உங்களைக் காத்து இருக்கிறது.

— பாமா

அறிவை அளவிடுங்கள்

o தூரதிருஷ்டக் கண்ணாடியைக் கண்டுபிடித்தவர் யார்?
— கலிலியோ கலிலி.

o உலகத்திற் பழங்களுக்குப் பிரசித்தியான இடம் யாது?
— கலிபோர்னியா.

o சமீந்த கோபுரம் எங்கே உளது?
— இத்தாலியில் பைசா நகரில்.

o கம்பளிக்கு பெயர் போன இடம் யாது?
— கான்பூர்.

o பிரான்சில் அதிகமாய்க் கிடைக்கும் பழம் யாது?
— முந்திரிகை.

o கைபீரியாவிலுள்ள பெரிய புல்வெளி யாது?
— ஸ்ரெப்ஸ்.

o உலகின் பெரிய உப்பு நீர்க்கடல் எது?
— காஸ்பியன் கடல்.

o ஸபெயின் நாட்டின் குடியரசுத் தலைவர் யார்?
— ஜெனரல் பிராங்கோ.

அனுப்பியவர்:
மு. க.

[5-ம் கலத் தொடர்ச்சி]

மாரி, சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 19. க. சச்சிதானந்தம் சுன்னாகம்ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 20. ந. சதானந்த சுன்னாகம் ஸ்கந்த, 21. செ. யோகராசா நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், 22. ஞானசோதி அப்பாத்துரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி. 23, கு. சரசேஸ்வரன் திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, 24. இ. விஜயேந்திரன் யாழ் இ. க. தமிழ் பாடசாலை 25. [illegible] திருநெல்வேலி செங்குந்தா [illegible] கல்லூரி.

மாணவர் மலர்

ஒருபடி உயர்வோமா—2

திட்டம்

கணேஷ்

எழுதி வாழாதான் வாழ்க்கை
கழுதை புரண்ட களம்
— குறள்

அடியெடுத்து வைக்கு முன் நாம் எப்பாதையால் செல்லப் போகிறோம் எப்படிச் செல்லப்போகிறோம் என்பதுபற்றி நாம் மிகவும் கவனமாக நுணுக்கமாக ஆராய்ந்து ஆலோசனை செய்து தீர்க்கமான தொருமுடிவு செய்து கொள்ள வேண்டும்.

காலத்தின் வேகத்தைக் கணக்கிட்டுக் கொண்டு விரிவான ஆராய்வுடன் விவேகத்துடன் செயலில் இறங்கவேண்டும் நமது வளர்ச்சிக்கு, நமது எதிர்காலவளமான வாழ்வுக்கு சுபிட்சத்துக்கு, வாழ்வின் வெற்றிக்கு புதுத்துடிப்போடு உயிர்த்துடிப்போடு செல்லத்தக்கதான பாதை நமக்குவழிகாட்டுமோ எந்தப்பாதை நம்மை ஒளி மிகுந்த இடத்துக்கு இழுத்துச் செல்லுமோ அந்தப் பாதையில் நமது முழுக் கவனத்தையும் ஒருங்கிணைத்து சேர்த்துக் கொண்டு செல்லவேண்டும்.

இது இப்படி அமைய வேண்டுமென வரையப்படுவதே திட்டம். நாம் செல்லப்போகும் நல்ல பயணத்துக்கு விஷயங்களை ஒழுங்குபடுத்தி சீர்படுத்தி படிப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக குழப்பமில்லாமல் சிக்கலில்லாமல் ஒப்பேற்றுவதற்கு திட்டம் உதவுகிறது. தேவையானதுஎது? தேவையற்றது எது? வேண்டியது எது? வேண்டாதது எது? விரும்பத்தக்கதுஎது? விலக்கப்பட வேண்டியது எது? பயனளிக்கத்தக்கது எது? பயனற்றது எது? உயர்த்துவது எது தாழ்த்துவது எது? என்பனபோன்ற பலகோணங்களுக்கானநல்லவிடை

[7-ம் பக்கம் பார்க்க]

உங்களுக்குதெரியுமா?

உலகத்திலேயே மிகவும் நீளமான பெயரை உடையவன் என்றபெருமை விஸ்காஸ்வினைச் சேர்ந்த ஒரு செல்வந்தனைச்சாரும். இவனுடைய பெயரை எழுதிப் புரிந்து கொள்ள முடியாது! அப்பெயர் 178 எழுத்துக்கள் கொண்டது.

1866-ம் ஆண்டு இந்த மனிதன் இறந்தவுடன் இவனுடைய பெயரைக் கல்லறையில் குறிக்க வேண்டுமானால் அதிக சலவைக் கற்கள் செலவாகுமென்று இவனுடைய பெயரைக் குறிக்காமல் விட்டனர்.

நீண்டநாள் நோயாளி

இப்பெயரைப் பெற்றவர் பிளாரஸ் நைட்டிங்கேல் அம்மையாராகும். 1857 ம் ஆண்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து 1910-ஆண்டு இறக்கும் வரை இந்த அம்மையார் படுக்கையிலே இருந்தார். 53 வருடங்கள் படுக்கையில் இவர் ஓய்வு பெற்றிருக்கிறார்.

நாடிக்குஒரு மன்னன்

இப்பட்டத்தைப் பெற்றவர் பேர்மனியைச் சேர்ந்த ஹோல்ஸ் ஸ்டெயிக்ஜர் என்பவராகும். இவருடைய நாடியின் நீளம் 5 அடி 3 அங்குலம். உலக வரலாற்றில் இதுவரை இவ்வளவு நீளமான நாடியை யாரும் வளர்த்தில்லை,

1567-ம் ஆண்டில் இவர் இறந்தார் இவர் இறந்தவுடன் இவருடைய நாடியை அப்படியே அகற்றி நகரத்து மியூசியத்தில் காட்சி பொருளாக வைத்துள்ளனர்.

உயிரோடு புதையல்

ஒரியோவில் ஒரு மனிதன் பூமிக்கடியில் ஆறடி ஆழத்தில் 45 நாட்கள் வரை உயிரோடு புதையுண்டு கிடந்து இந்தவகை தகறயில் புதிய சாதனையை ஏற்படுத்தினான்! ஆனால் அண்மையில் மற்றொரு மனிதன் 58 நாட்கள் உயிரோடு புதைக்கப்பட்டு வெளிவந்து இந்தச் சாதனையை முறியடித்துள்ளான்!

தகவல்: ச. ஜெயா

மாணவர் மலர் அங்கத்தினர்கள்

மாணவர் மலர் அங்கத்தவர்களாக நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் அங்கத்தவர்கள் சேர்ந்து விட்டார்கள். தினம் பலருடைய விண்ணப்பங்கள் கிடைத்த வண்ணமிருக்கின்றன.

வசதிபோல் வாராவாரம் அங்கத்தவர்கள் பெயர்கள் மலரில் பிரசுரமாகும்.

1. ஏ.எம். முகைதீன் திருகோணமலை மெ. மி. பாடசாலை, 2. வே. பாலேந்திரன் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. 3. க. கணேசன் வண்ணை வைத்தீஸ்வரன் வித்தியாலயம், 4. இ. சிவரத்தினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், 5. மு. அற்புதமலர் சண்டிலிப்பாய் பெண் பாடசாலை, 6, போ. சி. குருளானந்தம் யாழ்ப்பாண [illegible] சென் ஜோன்ஸ் கல்லூரி, 7. சிவகுமார் [illegible] ராசா பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி 8. சி. வைமுகவரதன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 9. வசந்தி ஆல்பேர்ட் யாழ் கொன்வண்ற் 10 நா. சண்முகலிங்கம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, 11. செ. சிவலிங்கம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 12. தலைட்சுமி கணேசன் திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலை, 12. அன்னி கிறிஸ்ரி யாழ். செஸபற்றிக்ஸ், 14. ப. புஸ்பரத்தினம் யாழ் இந்துக் கல்லூரி, 15. எஸ். நிமலா யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, 16 சாந்தி வேலுப்பிள்ளை மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, 17. எ. குலேந்திரன் திருமலை இந்துக் கல்லூரி, 18. அ. சகு

(3-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

1. மனேஜர்,
2. விற்பனையாளர்.

மேற்படி பதவிகளுக்கு 20-6-68 வரையும் விண்ணப்பம் காரியதரிசியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மனேஜர்: தகைமை

பொதுத் தராதரப் பரீட்சையிலும் கூட்டுறவுக் கலாசாலைப் பரீட்சையிலும் சித்தியடைந்தவராயும், வயது 25—40க்குமுள்ளவராயுமிருத்தல் வேண்டும்.

பிணை: காசு ரூபா 1000/-
ஆதனம்: ரூபா 3000/-
மாதச்சம்பளம்
ரூபா 120—200 / 14X5-1X10

சலுகையும் உள்படக்.

விற்பனையாளர்: தகைமை

கனிஷ்ட தராதரப்பரீட்சையில் சித்தியடைந்தவராயும் வயது 25—35க்குமுள்ளவராயுமிருத்தல் வேண்டும்.

பிணை: காசு ரூபா 500/-
ஆதனம்: ரூபா 1000/-
மாதச்சம்பளம்
ரூபா 60—110 / 14X3-1X8

சலுகையும் உள்படக்.

சி. அரியநாயகம்,
காரியதரிசி,
கணேச ஐக்கிய பண்டக சாலை.
உரும்பிராய். 825

MANOHARA
JAFFNA
Daily: 4-45, 7-00 & 9-45 P.M.
SEX AND THE SINGLE GIRL

REGAL JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45 P. M.
Roger Browne in
SUPER SEVEN CALLS CAIRO

நண்பர்களுக்கு மட்டும்

அளவெட்டி கிராமமுன்னேற்றச் சங்க வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு 11-6-68ல் கும்பழாவளை விநாயகராலயத்தில் நடைபெறும். முடிவுகள் 14-6-68ல் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.
824

AN INTERSIVE COURSE in ENGLISH

பல்கலைக்கழகப் புகுமுக G.C.E (சாதாரணம்) வகுப்பு மாணவர்களுக்குத் தீவிர ஆங்கிலப் பயிற்சி.

தொடக்கம்: 15-6-68 காலை 9 மணி.

நடத்துபவர்:

கா. வைரமுத்து B. A.,
8, பிரவுன் வீதி,
826 யாழ்ப்பாணம்.

புராணப்படிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு வட்டுக்கோட்டைஅடைக்கலத்தோட்டம் சந்தசுவாமி கோவிலில் பெரிய புராண படலப்படிப்பு இம்மாதம் 11-ம் திகதி தொடக்கம் நடைபெறும். (ந.நி.)

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ நடித்த
நான் யார் தெரியுமா?

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா நடிக்கும்
முகூர்த்த நாள்

ஜெயந்திநகர் வெற்றி

கிளிநொச்சி, சனி

கணேசபுரம் கோஷ்டிக்கும் ஜெயந்திநகர் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போர்த்தேங்காய் அடிப் போட்டியில் கணேசபுரம் கோஷ்டியை ஜெயந்தி நகர் கோஷ்டியினர் தோற்கடித்தனர். கிளிநொச்சி கந்தசுவாமிகோவிலில் நடைபெற்றஇப்போட்டிக்கு திரு வீ. கந்தையா மத்தியஸ்தம் வகித்தார்.

விளையாட்டு போட்டி

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 22-ந் திகதியாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 17-ம் திகதிநடைபெறவிருக்கின்றது. வவனியா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கந்தரவிக்கம் தம்பதிகள் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள். (கா.நி.)

திட்டம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களைக்கண்டறிந்து கொண்டே நல்ல உருவான நம்மை உயர்த்தக்கூடிய திட்டத்தை உருவாக்க வேண்டும்.

எதிர்காலத்துக்கான இந்தவரைபடத்தை [திட்டம்] நாம் தயாரிக்கப் போகும் பொழுது வாழ்வில் முன்னேற்றமடைந்தவர்களின் அனுபவம் நாம் பெற்ற நல்ல அனுபவம் இதெல்லாம் நமக்குப் பக்கத்துணையாக இருக்க வேண்டும்.

திட்டத்தை எவ்வளவு ஆராய்வுடன் ஆலோசனையுடன்தயாரிக்கின்றோமோ அந்த விதத்தில் தான் வெற்றி அமையும்.

நாம்தயாரிக்கும்எதிர்காலத்திட்டம்மிகச் செம்மையானதாக இருக்க வேண்டும். எவ்வளவு சிறப்பாக இதைதயாரிக்கமுடியுமோ அவ்வளவு சிறப்பாக அதைத் தயாரித்துக் கொள்ளவேண்டும் நாம் நிறைவேற்றப்போகும் உயர்ந்த கருமத்தை எப்படி ஆரம்பிப்பது எப்படி கொண்டு நடத்துவது? எப்படிமுடிப்பது? இந்த மூன்று விஷயங்களிலும் நாம் திட்டம் தீட்டும் பொழுது மிகஅவதானமான அக்கறை காட்ட வேண்டும்!

—(தொடரும்)—

வின்சர்
ஜெமினி கணேசன்
சாவித்திரி முத்துராமன்
கே. ஆர். விஜயா நாகேஷ்
நடித்த
சீதா
ஜெமினி கணேசனின்
100வது படம்.
சாவித்திரியின்
150வது படம்.
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாசா ஜைலன்
வெலிங்டன் விஜயா ராஜ்
[யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு] [நீர்கொழும்பு]
ஸ்ரீகிருஷ்ணா விஜிதா அயன்
[திருமலை] [அட்டன்] [மன்னார்]

★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், அசோகன், ராஜ்குமார்,
புஷ்பலதா, வி. கே. ராமசாமி,
நாகையா
நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

'ராமு'

அன்னை, குழந்தையும் தெய்வமும், மேஜர் சந்திரகாந்த் ஆகியவற்றை அளித்த ஏ.வி.எம். புரொடக்ஷன்ஸ் அளிக்கும் ஜனாதிபதி பரிசு பெற்ற மற்றோர் உன்னத திரைவிருந்து. சென்னையில் நூறு நாட்களுக்குமேல் ஓடிய படம்.

இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
டைரக்ஷன்: திருலோகசந்தர்

வரி விளம்பரம்

மரண அறிவித்தல்

சண்முகவடிவு அம்மாள்

வெங்கடாசலப் பத்தரின் மாமியாரும், இராசம்மா, சொர்ணம் அகிலோரின் தாயாரும், யாழ் சன்னாநட்டி P. V. S நாதன், பழனிவேல் என்போரின் பேர்த்தியாருமான திருமதி சண்முகவடிவு அம்மாள் யாழ்ப்பாணம், யாழ். வீதியிலுள்ள இல்லத்தில் 8-6-68 சனிக்கிழமை காலமாகிவிட்டார், அன்னாரின் பூதவுடல் 9-6-68 காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்துக்குத் தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். 1360

இவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது

அளவெட்டி, சனி

அளவெட்டி என்.கே. பத்மநாதனுக்கு 'நாகஸ்வர கலாநிதி' பட்டமும் கோண்டாவில் ஏ. பாலகிருஷ்ணனுக்கு நாகஸ்வர கலைமணி பட்டமும் பேராதனைப் பல்கலைக்கழக முருகன்கோவில் மகா கும்பாபிஷேக விழாவில் வழங்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டி

குரும்பசிட்டி, சனி

வசாவிளான் மத்தியமகா வித்தியாலய இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அடுத்தமாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கின்றது. இப் போட்டிக்கு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

O

யாழ்ப்பாணம், சனி

வலிகாமம் வடக்கு உடுவில் பகுதியின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை மாலை 8 மணிக்கு கன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறும். யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை இவ்வைபவத்திற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி முருகேசம்பிள்ளை வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்குவார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 9-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல்லது 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அல்லது 49 மீற்றர் பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் அல்லது 61 மீற்றர் மாலை 5-00 பிறந்தநினைவாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 நடோடிப் பாடல்கள், 6-45 பாவனம், 7-00 இந்திய நாடோடிப்பாடல்கள், 7-30 பரட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி,

தேவை

மானிப்பாய் வெஸ்லி, சினிமாவில் கடமையற்ற கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள் தேவை. [1] டிக்கட் விற்பனையாளர்கள், [2] டிக்கட் சேகரிப்பவர்கள். தெரிவு செய்பவர் பதவிக்கேற்ப பிணைப்பணம் கட்ட வேண்டும். மானிப்பாயில் வசிப்பவர் விரும்பத்தக்கது. விரும்புவோர் 10-6-68 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கும் 12மணிக்குமிடையில் தியேட்டருக்கு நேரில் வரவும். வே. நவரத்தினசிங்கம். 1551

நெசவு ஆசிரியர்:

நெசவு ஆசிரியர் குறைந்தது 10 வருட அனுபவம் வேண்டும். இளைப்பாறிய ஆசிரியர் விரும்பத்தக்கது. இருபாலாரும் அண்மையில் வேலைகொண்டவரிடம்பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்பத்திரத்துடன் உடனடியாகவிண்ணப்பிக்கவும். அதிபர், லேனா நெசவுத்தொழிற்சாலை, மகிலாகம் 1356

விற்பனைக்கு

வாகை:

நல்லநிலைமையிலுள்ள CV மொடல் போர்ட் வாகனவிற்பனைக்கு இஞ்சினியர்செய்யப்பட்டுள்ளது. ரயர்களும், றேடியேற்றரும் புதிது. யாழ்ப்பாணப் பெரியதபால் கந்தோருக்கு அருகாமையிலுள்ள பெரிய்டோ கராச்சில் பார்வையிடலாம். 1345

காணி:

12 1/2 பரப்புபனைக்காணி விற்பனவுக்கு கோண்டாவில் கிழக்கில் இருக்கின்றது. விபரங்கட்குதொடர்புகொள்ளவும். விலாசம்: திருமதி தியாகராசா அன்னம்மா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1335

தக்காளிச் செய்கை

கோடைத்தக்காளி வன்னிக் குடியேற்றத் தண்ணி வசதி உள்ள இடங்களில் நட்டால் நன்கு பலிதமாகும். என்னிடம் தக்காளி நாற்று இருக்கிறது. குறைந்த விலைக்கும் உபகாரமாகவும் கிடைக்கும். அரசாங்கம் இந்த பழங்களை எடுக்கும். தி சபாரத்தினம், இருபாலை ரோட், கோண்டாவில் கிழக்கு. 1358

Experienced lady tutor undertakes tution. Home visted. Apply "Vasantha Mahal" No. 50, Venkadeswarar Street, Perumalkovilady, Jaffna. 1359

நன்றி நவிலல்

22-5-68ல் பொன்னுலவரதராசப் பெருமாள் கோவிலில் நடைபெற்ற எமது திருமண வைபவத்தில்போது நேர்முகமாக வருகை தந்தவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள், வெகுமதிகள் அனுப்பிய உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது இல்லத்தில் நடைபெற்ற விருந்து வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். நா. செல்வத்துரையும் பாரியாரும், செல்வா புத்தக நிலையம், சுழிபுரம். 1357

இலவச படக்காட்சி

புலோலி, சனி

தெல்புலோலி பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தில் இன்று மாலை இலவச படக்காட்சி ஒன்று காண்பிக்கப்படவிருக்கிறது.

இக் காட்சியில் விளையாட்டு, விண்வெளிப் பயணம், உணவு உற்பத்தி போன்ற பல விடயங்கள் அடங்கியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது ஆற்றலுக்கு ஏற்ப பொறுப்பை செய்துவிட்டேன்

ஐக்கியமும் ஜனநாயகமும் வளர மாவட்டசபையால் வழிபிறக்கும்"

அமைச்சர் திருச்செல்வம் பேட்டி

(நமது நிருபர் கே. நடராசா)

"எனது ஆற்றலுக்கேற்ற வகையிலும், எனது கட்சியின் விருப்பத்திற்கேற்ற முறையிலும் என் பொறுப்பை செய்துமுடித்துவிட்டேன்" இவ்வாறு உள்ளூராட்சித்துறை அமைச்சர் செனட்டர் எம். திருச்செல்வம் கொழும்பு, சனி இன்று 'ஈழநாடு'க்கு அளித்த பிரத்தியேக பேட்டியொன்றில் கூறினார். மாவட்டசபை வெள்ளை அறிக்கை இறு மக்கள் பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்படவிருப்பதையொட்டி அமைச்சர் திருச்செல்வம் இக்கருத்தைக் கூறினார்.

நான் எனது பொறுப்பை என் ஆற்றலுக்கேற்ற வகையில் செய்துமுடித்துவிட்டேன். நாட்டில் தற்பொழுது நிலவும் அரசியல் நிலைமை 'ஈழநாடு' வாசகர்கள் அறிந்ததே.

நாடுமுழுவதும் ஜனநாயகம் ஸ்திரம் பெறவும் ஒற்றுமை பலம்பெறவும் மாவட்டசபை மசோதா வழிசெய்யும். இதனை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்' என்று அமைச்சர் கூறினார்

கச்சேரி முறை

கச்சேரி முறை அந்நியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டவொன்று. இந்த முறை மாறி ஆட்சிப்பொறுப்பில் மக்கள் அதிக பங்கு கொள்ளும் முறையொன்று இப்பொழுது நடைமுறைக்கு வரப்போகின்றது மாவட்டசபையில் தெரிவு செய்யப்படும் தலைவர்தான் முக்கிய பிரமுகராய் இருப்பார். அரசாங்க அதிபர் அல்ல' என்று அமைச்சர் மேலும் கூறினார்.

நீர்வேலி, சனி

நீர்வேலியிலிருந்து வெளியிடங்களுக்கு தந்தி மற்றும் டெலிபோன் தொடர்புகள் கொள்ள விரும்பும் மக்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியாதநிலையில் இருக்கிறார்கள். இங்கிருந்து 7 கட்டை தூரமுள்ள யாழ்ப்பாணத்துக்குத் தந்திசெல்ல சுமார் 2 மணிநேரம் மிடிக்கிறதாம். இத்தொலைவுக்கிடையிலான தந்தி வழக்கமாக 5 நிமிடத்தில் கொடுக்கப்பட்டுவிடுமாம்.

யாழ்ப்பாணம், சனி

இணுவில் வைத்தியசாலையின் அதிகாரியாக டாக்டர் ஜே. எம் அமரசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து சென்றுமேற்படிப்பை முடித்தபின் அரசாங்கத்தில் சேவை செய்து வந்த இவர் இணுவில் ஆஸ்பத்திரியில் சேவை செய்வதற்காக அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். இவர் காலஞ்சென்ற ஜே. ஸி. அமரசிங்கத்தின் மகனாவார்.

லிகிதர் கைது

சங்கம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், சனி

கல்லூரிக்குச் சொந்தமான உபகரணங்களை வீட்டுக்குக் கொண்டுசென்ற புகாரொன்றின்பேரில் கைதுசெய்யப்பட்ட லிகிதர் ஒருவர் இம்மாதம் 11-ந் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சங்கானைப் பொலிஸ்பகுதியிலுள்ள கல்லூரியொன்றில் கடமையாற்றும் இந்த லிகிதர் மல்லாகம் மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜர் செய்யப்பட்ட பின்னரே றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது,

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட கல்லூரி அதிபர் குறிப்பிட்ட லிகிதரை வடமாநிலக் கல்வி யதிகாரியின் அனுமதியிலாது பொலிசாரிடம்கொடுத்தது தவறென்று வடமாநிலக் கல்வி இலாகா எழுதுவினைஞர்கள் சங்கத்து மகஜரொன்று, கல்வி அதிகாரியிடம் சமர்ப்பித்துள்ளனர். அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் இதுபற்றி ஆட்சேபம் தெரிவித்துள்ளது

[கா. நி.]

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவில்

பூங்காவனத் திருவிழா

இம்மாதம் 11-6-68 செவ்வாக்கிழமை நடைபெறும் கலை நிகழ்ச்சிகளும், வாண ஜாலக் காட்சிகளும் வேறு விசேட நிகழ்ச்சிகளும் நடைபெறும். அடியார்கள் அழைக்கப்படுகின்றனர்

இங்ஙனம்,
பரிபாலகர்

829

எதிர்க்கட்சியினருக்கு.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

செய்துவருகின்றனர். இவர்கள் மட்டுமல்லாது வேறு சிலரும் கூட இப்படி பிரசாரம் செய்து வருகின்றனர். சில பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பான வலையில் எழுதுவதுடன் தவறான செய்திகளையும் வெளிவிடுகின்றன. மாவட்ட சபை நகல் மசோதா எனக் கூறி ஒரு மசோதாவை ஒரு பத்திரிகை வெளியிட்டது. இப்பொழுது மக்கள் உண்மையை உணர்ந்திருப்பார்கள். எதிர் கட்சியினர் மாவட்ட சபைகள்மசோதா சம்பந்தமாகச்செய்து வந்த தவறான பிரசாரம் இப்பொழுது மக்களுக்கு தெரியவந்துவிட்டது உண்மையை எதிர்நோக்கவதற்கு எதிர் கட்சியினருக்கு தைரியமில்லை இதனால்தான் அவர்கள் இந்த விவாதத்திற்கு கலந்துகொள்ளாமல் வெளிநடப்புச் செய்திருக்கின்றனரென்று பிரதமர் கூறினார்.

"சிங்களவரைக் காட்டிக்கொடுத்தேனா?"

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா மேலும் குறிப்பிட்டதாவது.

மாவட்டசபைகள் அமைக்க முன்வந்ததன் மூலமும் மாவட்டசபை மசோதாவை கொண்டுவந்ததன் மூலமும் சிங்கள மக்களை நான் காட்டிக்கொடுத்துவிட்டதாகவும் அவர்களுக்கு நான் துரோகம் செய்துவிட்டதாகவும் எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்கின்றனர். 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி தமிழ் மொழி உபயோகச் சட்ட விசேஷ விதிகள் கொண்டு வரப்பட்டபோதும் எதிர்க்கட்சியினர் இப்படித்தான் கூறினர்.

பின்னர் இலங்கை-இந்திய (சிறிமா-சாஸ்திரி) ஒப்பந்த அமுல் மசோதாவை நான் கொண்டு வந்தபோதும் நான் கண்டிய சிங்கள மக்களுக்குத் துரோகம் செய்வதாகவும் அவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டதாகவும் கூறினார்கள் எனது உடம்பிலும் கண்டிச் சிங்கள இரத்தம் அதிகம் ஓடுகிறது தமிழ்மொழிச் சட்ட விதிகளைக் கொண்டுவந்ததனாலும் இலங்கை-இந்திய ஒப்பந்த மசோதாவைக் கொண்டுவந்ததனாலும் சிங்கள மக்களுக்குத் துரோகம் செய்தேனா, காட்டிக்கொடுத்தேனா? மாவட்டசபைகள் அமைப்பதன் மூலம் யாரையும் நான் காட்டிக் கொடுக்கவும் மாட்டேன், யாருக்கும் துரோகம்செய்யவும் மாட்டேன். மக்கள் இதை உணர்வார்கள்.

மாவட்டசபை இரகசிய ஒப்பந்தமா?

சமஷ்டிக்கட்சியினரும் யு. என். பி. யினரும் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தத்தின் பயன்தான் மாவட்டசபை மசோதா என்று கூறப்படுவதுபற்றிக் குறிப்பிட்டு பிரதமர் திரு. டட்லிசேனநாயகா தெரிவித்ததாவது:-

மாவட்டசபைகள் அமைக்கவேண்டுமென்ற யோசனை இப்பொழுது தான் புதிதாகத் தோன்றிய ஒன்றல்ல. நாற்பதுவருடங்களுக்குமுன்னர் இதுமுதல்முதல் தெரிவிக்கப்பட்டது இதன் பின்னர் இடையிடையே இந்த யோசனை தெரிவிக்கப்பட்டுவந்ததுடன் இதற்கான மசோதாக்களும் கொண்டு வரமுயற்சிகள் செய்யப்பட்டன. இந்தயோசனைகளின் தும்முயற்சிகளினதும் உருவம்தான் இப்பொழுது வெள்ளையறிக்கையுடன் இணைந்துள்ள மாவட்டசபை நகல் மசோதா.

மாவட்டசபைகள் நிர்வாகத்தைப் பரவலாக்கி, மக்களுக்கு கூடியபங்குகொடுத்து நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டமேயாகும்.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் சமஷ்டிக்கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, அவர்கள் பூரண அதிகாரமுள்ள மாவட்டசபைகள் அமைக்கப்படவேண்டுமெனக் கோரியதாகவும் இதற்குநான் மறுத்துவிட்டதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இதன்பின்நிலமன எம்.பி. ஜனாப் இஸ்தீன் முகம்மது மாவட்டசபைகளை ஆதரித்துப்பேசினார்.

மதுரை மணிஐயர் காலமானார்

சென்னை, ஜூன் 8

பிரபல கர்நாடக சங்கீத வித்துவான் மதுரை மணிஐயர் இன்று காலை சென்னையில் காலமானார். அவருக்கு வயது 56.

பொலிஸ் அதிகாரி விடுதலை

கொழும்பு, சனி

1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந்திகதி நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த முன்று உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன்ட்களில் ஒருவரான திரு. வான்ட்டுவஸ்ட் விசாரணையின் பின்னர் குற்றமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டுவிட்டார். இப்பொழுது மற்றொரு உதவிப் பொலிஸ் சுப்ரிண்டனான திரு. ஸ்டீவன் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண நவீன சந்தை அமைப்பு

மாநகரசபையினரே கட்டிடவேலையை மேற்கொள்வர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் நிறுவத் திட்டமிடப்பட்ட புதிய நவீன மார்க்கட்டை மாநகரசபை தனது நிர்வாகத்திலேயே கட்டுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவிருக்கிறது. இதற்கான துரித நடவடிக்கைகளை உள்ளூராட்சிஅமைச்சு மேற்கொண்டு வருவதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

இப்புதிய மார்க்கட்டைக் கட்டுவதற்கான அத்திவாரக் கல்லை பிரதமர் திரு. டட்லிசேனநாயகா கடந்த வருடம் டிசம்பர் மாதம் நாட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்து புதிய மார்க்கட்டைக் கட்டுவதற்கான அனுமதி இக்குள்ள தனிப்பட்ட ஸ்தாபனம்ஒன்றிற்கு வழங்கப்பட்டது.

இருந்தபோதும் புதியமார்க்கட்டைக் கட்டுவதற்கான அனுமதி கோரியிருந்த ஸ்தாபனத்தின் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளமறுத்ததே மாநகரசபையினர் இதனைக்கட்டுவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளதற்கான காரணம்என சம்பந்தப்பட்ட உயர்தர அதிகாரிஒருவர் நேற்றுதெரிவித்தார்.

மாநகரசபை விசேஷ ஆணையாளர்களுக்கு ஒப்பந்தங்களுக்கு கையெழுத்திடுவதற்கான அதிகாரம் இல்லையென அண்மையில் இயற்றப்பட்ட சட்டப் பிரச்னை பொன்றைத் தொடர்ந்தே மார்க்கட் கட்டட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட ஸ்தாபனத்தினர் கடைசி நேரத்தில் ஏற்றுக்கொள்ள மறுத்ததற்கான காரணம் ஏனத்தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபையினர் தமது நிர்வாகத்தில் மாநகரசபைவேலைப்பகுதி பொறியியல் நிபுணர்கள்ஊழியர்களுடன் புதிய மார்க்கட்டைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவிருக்கின்றனர். நேற்றுமுன்தினம் இங்கு வந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் இது பற்றி மாநகரசபை விசேஷ ஆணையாளர்களுடன் பேச்சுவார்த்தையைநடத்தியபின்னர் கொழும்பு திரும்பினார்.

(கா. நி.)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ந்திகதி அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org